23 APR 2004

Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உங்கள் பற்களின்
வெண்மைக்கும், உறுதிக்கும்
பற்களை பளபளக்க வைக்கும்



அன்னா பற்பொடி

ANNA INDUSTRY-INUVIL
Tele Phone: 2223565

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 02 (23.04.2004) வெள்ளிக்கிழமை இதழ் :205

- மூன்று கட்டங்களாக நடைபெற்ற வாக்களிப்பு -

# சபாநாயகராக லொக்குபண்டார தெரிவு

# புதிய அரசாங்கத்திற்குப் படுதோல்வி!

## கூச்சல், குழப்பங்களால் நாடாளுமன்றம் அதிர்வு



லொக்கு பண்டார

(கொழும்பு)

**கூச்சல், குழப்பங்கள் மத்தியில் அடுத்தடுத்து நடத்தப்பட்ட மூன்று கட்ட இரகசிய வாக்கெடுப்புக் களை அடுத்து, 13 ஆவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக - ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பா ளரான டபிள்யு.ஜே.எம். லொக்குபண்டார தெரிவு செய்யப்பட்டார்.**

**இந்த இரகசிய வாக்கெடுப்பில் ஒரு வாக்கு வித்தி யாசத்தில் ஆளும் கட்சி வேட்பாளர் தோல்வி கண்ட தால் புதிய அரசாங்கம் முதலாவது நாடாளுமன்ற அமர்விலேயே பெரும் நெருக்கடியைச் சந்தித்தது.**

13 ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பமானது. நாடாளு மன்ற செயலாளர் நாயகம் பிரியாணி விஜேசேகர முத லில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் செய்தியை வாசித்தார்.

இதையடுத்து, நாடாளுமன்ற சபாநாயகரைத் தெரிவு செய்வதற்கான அறிவிப்பை பிரியாணி விஜேசேகர விடுத் தார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் சபாநாயகர் தெரிவுக்கு டி.யூ.குணசேகரவின் பெயரை பிரத மர் மஹிந்த ராஜபக்ஷ முன்மொழிந்தார். இதனை ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ச வழிமொழிந்தார்.

அடுத்து - ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் சபாநா யகர் பதவிக்குப் போட்டியிடுவதற்கு டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டாரவின் பெயரை முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா முன்மொழிய, அதனை சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வழிமொழிந்தார்.

இதனால், 16 ஆவது சபாநாயகரைத் தெரிவு செய்வதற்கு இரகசிய வாக்கெடுப்பு நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டது.

சபாநாயகர் தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்புக் குறித்து நாடாளுமன்ற செயலாளர் பிரியாணி விஜே சேகர அறிவித்தையடுத்து- உறுப்பினர்களுக்கு வாக்குச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு வாக்களிப்பு இடம்பெற்றது.

## சமநிலையில் முடிவடைந்த முதற்கட்ட வாக்களிப்பு

சபாநாயகரைத் தெரிவு செய்ய இரகசிய வாக் கெடுப்பு நடத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து - ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாட்டை வண. அத்துரலியே ரத்தின தேரர் - தமது கட்சி உறுப்பினர்கள் வாக்களிப்பில் இருந்து ஒதுங்கியிருக்கப் போவதாக அறிவித்தார்.

இதையடுத்து, சபையில் அமளி துமளி ஏற்பட்டது. பின்னர் அமைதி நிலவியது.

வாக்களிப்பு முடிவுற்றதும் நாடாளுமன்ற செயலாளர் முன்னிலையில் வாக்குகள் எண்ணப்பட்டன.

இந்த வாக்களிப்பில் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டா ரவுக்கும், டி.யூ.குணசேகரவுக்கும் சமமாக - 108 வாக்குகள

லொக்கு பண்டார வுக்கு ஆதரவாக ஐ.தே.க, சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸ், இ.தொ.க, மலை யக மக்கள் முன்னணி மற்றும் இலங்கைத் தமி ழரசுக்கட்சியின் 21 உறுப பினர்களும வாக்களித் தனர்.

தமிழரசுகட்சியின் சார்பில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்த



## காணாமற்போன பிக்குகள் நாடாளுமன்றம் வந்தனர்!



ஹெல உறுமய பிக்குகள்

கடந்த சில நாட்களாகக் காணாமற் போயிருந்ததாக அறி விக்கப்பட்ட ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் நேற்று நாடாளுமன்றத்துக்கு சமூகமளித்துள்ளனர்.

கொழும்பு மாவட்டத்திலி ருந்து 10 ஆயிரத்து 512 விருப்பு வாக்குகளைப் பெற்று தெரிவான வண. கட்டலுவே ரட்ணசிறி தேரோவும், கம்பஹா மாவட்டத்திலிருந்து 7 ஆயிரத்து 389 விருப்பு வாக்குகளைப் பெற்றுத் தெரிவான வண அபரேக பல்னானந்த தேரோ ஆகிய இருவரும் கடந்த சில நாட்களாக காணாமற்போயிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இவர்கள் இருவரையும் ஆளும் ஐக்கிய (12 ஆம் பக்கம் பார்க்க)

## சம்பந்தன் உரையாற்றியபோது ஆளும் கட்சியினர் பெரும் கூச்சல்

(கொழும்பு)

புதிய சபாநாயகராக டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார தெரிவுசெய் யப்பட்டதையடுத்து - புதிய சபா நாயகரை வரவேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற குழுத் தலைவர் இரா.சம் பந்தன் உரையாற்றியபோது ஆளும் கட்சியினர் கூச்சல், குழப்பத்தில் ஈடுபட்டனர்.

இரா.சம்பந்தன் பேசிக் கொண்டி ருந்த போது - ஆளும் கட்சி உறுப் பினர்கள் உரத்த குரலில் கூச்சலிட் டதுடன், மேசைகளைத் தட்டி குழப் பம் விளைவித்தனர்.

சில உறுப்பினர்கள் தம்முன் இருந்த கோப்புகள் மற்றும் கடதாசி களை தூக்கி சபைக்கு நடுவே வீசி யெறிந்தனர்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் சம்பந்தனின் உரையைத் தொடர்ந்து குழப்பிக் கொண்டிருந்த நிலையில்- அவர்களை அமருமாறு ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணி பொதுச் செயலாளர் சுசில் பிறேம ஜயந்தவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் பலத்த முயற்சி எடுத்தனர்.

ஆனாலும், ஆளும் கட்சி உறுப் பினர்கள் தொடர்ந்து குழப்பம் விளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

போவதாக அறிவித்தார்.

இதையடுத்து, சபையில் அமளி துமளி ஏற்பட்டது. பின்னர் அமைதி நிலவியது.

வாக்களிப்பு முடிவுற்றதும் நாடாளுமன்ற செயலாளர் முன்னிலையில் வாக்குகள் எண்ணப்பட்டன.

இந்த வாக்களிப்பில் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டாரவுக்கும், டி.யூ.குணசேகரவுக்கும் சமமாக - 108 வாக்குகள கிடைத்தன.

எட்டு உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் இருந்தனர். ஒரு வாக்கு நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

வாக்கெடுப்பின் போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் 105 பேருடன், ஈ.பி.டி.பி உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இரு உறுப்பினர்கள் டி.யு.குணசேகரவுக்கு ஆதரவளித்தனர்.

மற்றும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் 21 உறுபபினர்களும வாக்களித்தனர்.

தமிழரசுகட்சியின் சார்பில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்த போதும் மட்டு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிய கிங்ஸ்லி இராசநாயகத்துக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட அரியநேந்திரன் சபைக்கு வரவில்லை.

இந்த வாக்கெடுப்பில் ஜாதிக ஹெல உறுமய கலந்து கொள்ளாது என அறிவிக்கப்பட்டிருந்தது.


வாக்களிக்கும் பிரதமர்

ஈடுபட்டனர்.

இரா.சம்பந்தன் பேசிக் கொண்டிருந்த போது - ஆளும் கட்சி உறுப்பினர்கள் உரத்த குரலில் கூச்சலிட்டதுடன், மேசைகளைத் தட்டி குழப்பம் விளைவித்தனர்.

செயலாளர் சுசில் பிறேம ஜயந்தவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் பலத்த முயற்சி எடுத்தனர்.

ஆனாலும், ஆளும் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து குழப்பம் விளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாம்கட்ட வாக்களிப்பை குழப்பிய ஆளுங்கட்சி


குழப்பத்தைத் தீர்க்க பேச்சு நடத்தப்படுகிறது.

ஒன்பது உறுப்பினர்களை ஜாதிக ஹெல உறுமய கொண்டிருந்த போதும எட்டுப் பேர் மட்டுமே வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

சபாநாயகர் தெரிவுக்கான தேர்தலில் 2 வேட்பாளர்களும் சமமான வாக்குகளைப் பெற்றிருந்தமையால் இரண்டாவது சுற்று வாக்கெடுப்புக்கு விடுவதாக நாடாளுமன்ற செயலாளர் பிரியாணி விஜேசேகர அறிவித்தார்.

இதையடுத்து, நேற்றுப் பிற்பகல் 1.25 மணியளவில் இரண்டாவது கட்ட வாக்களிப்பு ஆரம்பமானது. முதலாவது கட்ட வாக்களிப்பின் போது ஐ.தே.க பக்கம் இருந்த ஒருவர் ஆளும் கட்சி வேட்பாளருக்கு வாக்களித்திருக்கலாம் என கருதப்பட்டது.

இதனால் இரண்டாவது சுற்று வாக்களிப்பில் கலந்து கொண்ட ஐ.தே.க உறுப்பினர்கள் வாக்களிப்பதற்கு முன்னர் லொக்குபண்டாரவிடம் புள்ளடியிடப்பட்ட வாக்குச்சீட்டுக்களை காண்பித்துவிட்டு வாக்களித்தனர்.

சில ஐ.தே.க உறுப்பினர்கள் தமது வாக்குச்சீட்டுக்களை ஆளும் கட்சியினருக்கு தூக்கிக் காண்பித்துவிட்டு வாக்களித்தனர்.

இதையடுத்து, வாக்களிப்பு நடந்துகொண்டிருந்த போது சபையில் குழப்பநிலை ஏற்பட்டது. ஆளும் கட்சியினர் கூச்சல்போட்டபடியே - சபையின் நடுப் பகுதிக்கு வந்து குழுமினர்.

இரகசிய வாக்கெடுப்பு நடைபெறும்போது ஐ.தே.க உறுப்பினர்கள் தமது வாக்குச்சீட்டுகளை பகிரங்கமாக காண்பித்ததால் இந்த இரகசிய வாக்கெடுப்பு செல்லுபடியாகாது என ஆளும் கட்சியினர் கோஷமெழுப்பியதுடன் - வாக்குப் பெட்டிகளின் மீது ஏறியமர்ந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## யு.என்.எச்.சி.ஆர். அதிகாரிகள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!

(கிளிநொச்சி)

அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை யு.என்.எச்.சி. ஆரின் ஜெனிவாவிலுள்ள நிறைவேற்றுப் பணிப்பாளர் டெனிஸ் மக்நமரா நேற்று கிளிநொச்சியில் சந்தித்து இடம்பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் பின்னர் மக்நமரா கருத்துத் தெரிவிக்கையில் -

தனது கிளிநொச்சி விஜயத்திற்கான நோக்கம் தமிழ்ச்செல்வனிடமிருந்து தற்போதைய அரசியல் நிலைமை, இடைநிறுத்தப்பட்ட சமாதான முயற்சியை மீள ஆரம்பித்தல் மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் போன்றவற்றை அறிந்துகொள்வதற்கே ஆகும்.


தமிழ்ச்செல்வனை சந்தித்த யு.என்.எச். சி.ஆர் அதிகாரிகள்.

அத்துடன், மீள்குடியமர்வுக்கென திரும்பிவரும் மக்களுக்கு சகல வசதிகளிலும் உறுதியான முறையில் யு.என்.எச்.சி.ஆர் உதவ முடிவெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். இதிலும், மிகவும் பாதிக்கப்பட்ட வறிய மக்களுக்கு உதவுவதற்கு முன்னுரிமை கொடுக்கப்படுமெனவும் (12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297

077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போஏயார்

வான் வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR

your friend in the skies...

# யாழ்.நகரப் பகுதியில் சைக்கிள் திருட்டு!

யாழ்.நகரப் பகுதில் உள்ள விற்பனை நிலையத்திற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மதியம் 2 மணியளவில் இடம் பெற்றது. ஆறுமுகம் மகாலிங்கம் என்ற நபரே சைக்கிளை பறிகொடுத்தவர் ஆவார். இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - மேற்படி நபர் வியாபார நிலையம் முன்பாக சைக்கிளை நிறுத்தி விட்டுச் சிறிது தூரம் சென்று சைக்கிளைப் பார்த்த போது - யாரோ திரு டிச் செல்வதை அவதானித்து, அவரைப்பின்தொடர்ந்தும் திருடன் சைக்கிளுடன் தப்பிச் சென்று விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## வறிய மாணவர்களின் கல்வி நிதிக்காக

# தமிழ் மாணவர் ஒன்றியத்தின் கொடிவாரம் இன்று ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

வறிய மாணவர் கல்வி மேம்பாட்டு நிதியத்திற்காக தமிழ் மாணவர் ஒன்றியம் நடத்தும் கொடிவாரம் இன்று தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்தக் கொடிவாரத்திற்கான அங்குரார்ப்பண வைபவம் இன்று காலை 10 மணிக்கு மூன்று இடங்களில் நடைபெறவுள்ளது.

இதன்படி - வடமராட்சி. வலயத்திற்கானது - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், தென்மராட்சி வலயத்திற்கானது - சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறும். அதேவேளை - வலிகாமம் மற்றும் யாழ்.வலயங்களுக்காக, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவிருந்த இந்த நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத்தால், யாழ்.மத்திய கல்லூரியில் நடாத்த ஏற்பாடாகியுள்ளது.

எனவே - வறிய மாணவர்களின் கல்வியில் ஆர்வம் கொண்ட அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

### கணக்காய்வுப் பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவிருந்த கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் தரம் இரண்டிற்கான உத்தியோகத்தர் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை பரீட்சை ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளதாக யாழ்.வலயக் கல்விப்பணிமனை தெரிவித்துள்ளது.

### அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் உள்ள நாவலர் வீதியில் இருந்து நேற்றுக் காலை கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ஆறுமுகம் லிங்கேஸ்வரி என்பவரின் அடையாள அட்டையுடன், வேறுசில முக்கிய சில ஆவணங்களுடன் இந்தக் கைப்பையை உரியவர் நமது ஈழநாடு அலுவலகத்திற்கு நேரில் வந்து பெற்றுக்கொள்ள முடியும்.

## இந்திய நாடாளுமன்றத்தேர்தல்

# அ.தி.மு.க வேட்பாளர்கள் நேற்று வேட்புமனுத்தாக்கல்!

அ.தி.மு.க வேட்பாளர் 33 பேரும் நேற்று தங்களது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

தமிழ் நாட்டில் வேட்புமனுத்தாக்கல் கடந்த 16 ஆம் திகதி தொடங்கியது. மனுத்தாக்கல் செய்ய நேற்றுத்தான் கடைசிநாளாகும்.

அ.தி.மு.க தவிர்ந்த பிறமுக்கிய கட்சிகளின் வேட்பாளர்கள் கடந்த சில நாட்களாக மும்முரமாக மனுத்தாக்கல் செய்து வருகின்றார்கள்.

அமாவாசை முடிந்து வளர்பிறையில் வேட்பாளர்கள் மனுத்தாக்கல் செய்ய வைக்குமாறு போயஸ் தோட்டத்து ஆஸ்தான ஜோதிடர்கள் முதல்வர் ஜெயலலிதாவிடம் பரிந்துரைத்தனர்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் அட்சய திருதியை நாள் என்பதால் நேற்றையதினம் வேட்பு மனுத்தாக்கல் செய்யுமாறு 33 வேட் பாளர்களுக்கும் ஜெயலலிதா உத்தரவு பிறப்பித்தார்.

இதைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் நேற்றுக் காலை தங்களது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர். தி.மு.க சார்பில் தென் சென்னைத் தொகுதியில் போட்டியிடும் முன்னாள் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலுவும் இந்த நல்ல நாளுக்காகக் காத்திருந்து நேற்றையதினமே மனுத் தாக்கல் செய்தார்.

## பாடசாலை மாணவரிடையே

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்திய போட்டிகளில் பரிசுபெற்றோர் விபரம்!

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் ஒன்றுக்கு பாடசாலைகளுக்கிடையே நடாத்திய பல்வேறு போட்டிகளில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு -

இவர்களுக்கான பரிசளிப்பு இன்று பிற்பகல் 2 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் விஞ்ஞான சங்க வருடாந்த பரிசளிப்பு விழாவில் வைத்து வழங்கப்படும் எனவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

**எழுத்துமூல வினாவிடைப் போட்டி**

முதலாம் இடம் - சி.பகீரதன் (ஹாட்லி கல்லூரி), இரண்டாம் இடம் - ச.தனஞ்செயன் (ஹாட்லி கல்லூரி), மூன்றாம் இடம் - சி.தர்ஷன் (ஹாட்லி கல்லூரி), மூன்றாம் இடம் - பி.சாலினி (வேம்படி மகளிர் கல்லூரி), ஐந்தாம் இடம் - கே.ஷேஷானந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), ஆறாம் இடம் - ரீ.தனுஜா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஏழாம் இடம் - எஸ். குஷாந்தினி (நெல்லியடி ம.ம.வித்தியாலயம்), எட்டாம் இடம் வி.கௌசல்யா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஒன்பதாம் இடம் - எஸ்.கார்த்திகா (மெதடிஸ்த கல்லூரி), பத்தாம் இடம் - கே.குணாளன் (நெல்லியடி ம.ம.வித்தியாலயம்).

**வாய்மொழி வினாடி வினா**

முதலாம் இடம் - ஹாட்லி கல்லூரி, இரண்டாம் இடம் - சென். ஜோன்ஸ் கல்லூரி.

**பேச்சுப்போட்டி**

முதலாம் இடம் - க.சுகாஸ் (யாழ்ப்பாணக் கல்லூரி), இரண்டாம் இடம் - கே.தர்ஷணன் (யாழ்.இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம் - ரி. தனுஜா (நெல்லியடி ம.ம.வித்தியாலயம்).

**கட்டுரைப் போட்டி**

முதலாம் இடம் - எஸ்.மயூரதி (வேம்படி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் - ரி.கஜந்தினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் எச்.மரியதாஸ் (கிளி. முருகானந்தா மகாவித்தியாலயம்), நான்காம் இடம் - ரீ.இனோதாரணி (நெல்லியடி ம. ம.வித்தியாலயம்), ஐந்தாம் இடம்- எஸ்.அனோஜன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), ஆறாம் இடம் - ரி.சந்திர குமார் (யாழ்.இந்துக் கல்லூரி), ஏழாம் இடம் - வி.மதிவதனி (கிளி.இந்துக் கல்லூரி), எட்டாம் இடம்- எஸ். காண்டீபன் (ஹாட்லி கல்லூரி), ஒன்பதாம் இடம் - எஸ். தர் மிளா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), பத்தாம் இடம் - எஸ்.தர்ஷனா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**அத்துடன் - கண்காட்சிப் போட்டியில் பரிசில் பெற்ற பாடசாலைகள்-**

1 ஆம் இடம் - இந்துக் கல்லூரி, 1ஆம், 9 ஆம் இடம் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), 3ஆம் இடம் (யாழ்ரன் ஹாட்லி கல்லூரி), 4 ஆம் இடம் (விக்ரோறியா கல்லூரி), 4ஆம், 5ஆம், 8ஆம் இடங்கள் (பற்றிக்ஸ் கல்லூரி) 5ஆம் இடம் (மத்திய கல்லூரி), 10 ஆம் இடம் (வேம்படி கல்லூரி), 11 ஆம் இடம் (இந்து மகளிர் கல்லூரி).


நிறஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், அபிராமி நடித்த
வானவில்
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)
Mercury Rising
(சீ-2386)

நாகம்ஸ் சுன்னாகம்
புதிய வெளியீடாக
பிரசன்னா, அனு, நிரோஷா, வடிவேல் மற்றும் பலர் நடித்த
காதல் டாட் காம் (ரீல்ஸ்)
24 தொடக்கம் ஜெய்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
(சீ-2397)

ராஜா யாழ்ப்பாணம்.
இளைய தளபதி விஜய், திரிஷா நடித்த
கில்லி

காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சீ-2387)


# பிரதமர் வாஜ்பாய் குறித்த திடுக்கிடும் தகவலை வெளியிடுவேன்

## ராம்ஜெத்மலானி எச்சரிக்கை

(சென்னை)

பிரதமர் வாஜ்பாய் பற்றிய திடுக்கிடும் தகவலை வெளியிடுவேன் என்று ராம்ஜெத்மலானி கூறியிருக்கிறார்.

பிரபல சட்டநிபுணரும், முன்னாள் மத்திய அமைச்சருமான ராம்ஜெத்மலானி உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோ தொகுதியில் பிரதமர் வாஜ்பாயை எதிர்த்து போட்டியிடுகிறார்.

40 ஆண்டு நண்பர்களாகிய நமக்குள் போட்டி வேண்டாம் என்று பிரதமர் விடுத்த கோரிக்கையை ஏற்று அவர் வாபஸ் பெறப்போவதாக முதலில் செய்தி வெளிவந்தது.

ஆனால், பின்னர் மனதை மாற்றிக்கொண்ட அவர் வாஜ்பாயை எதிர்த்து நான் போட்டியிடும் முடிவில் எந்தவித மாற்றமும் இல்லை என்று உறுதிபட அறிவித்தார்.

இதனால், லக்னோ தொகுதி 40 ஆண்டுகால நண்பர்கள் மோதும் களமாக மாறியிருக்கிறது.

இந்தநிலையில், லக்னோவில் முகாமிட்டிருக்கும் ராம்ஜெத்மலானி ஒரு பேட்டியில் கூறியிருப்பதாவது,

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் பிரதமரின் தேசப்பற்றை சந்தேகிக்கின்ற ரகசியத்தை விரைவில் வெளியிடுவேன்.

நான் என் மகனைப் பார்ப்பதற்கு லண்டன் சென்றிருந்தபோது, எனது மனுவை வாபஸ் செய்ய பேரம் நடந்ததாகக் கூறுவது தவறான தகவல்.

இதில் தொழிலதிபர் இந்துஜாவும் தலையிட்டார் என்பது எல்லாம் அடிப்படை ஆதாரம் இல்லாத செய்திகள்.

பிரதமர் வாஜ்பாயை திரிதி ராஷ்டிரர் என்று நான் சொன்னது உண்மைதான்.

வாஜ்பாய் எதிலுமே கவனம் செலுத்துகிற அளவில் அவரின் மனநிலை இல்லை. தேர்தல் கூட்டங்களில் அவரது பேச்சுக்களின் தடுமாற்றமே இதை உறுதிசெய்கிறது. ஓட்டுப்போடுகிற மக்களுக்கு எல்லா உண்மைகளும் தெரியும்.

அவரை எப்போதுமே நான் நண்பராகத்தான் நினைத்து வருகிறேன். ஆனால் அவர் அப்படி நடந்து கொள்ள மறுக்கிறார். எனவேதான் ஏமாற்றம் காரணமாக அவரை விமர்சிக்கவேண்டி வருகிறது.

பாரதீய ஜனதா தலைவர்களில் ஒருவரான லால்ஜி தாண்டன் என்னை புத்திசுவாதீனம் இல்லாதவர் என்று விமர்சனம் செய்தார். அந்த நிகழ்ச்சிக்கு பிறகு வாஜ்பாய் பற்றி நான் வெளியிட்ட எந்தக் கருத்தையும் மறுப்பதற்கில்லை.

இவ்வாறு ராம்ஜெத்மலானி கூறினார்.


நமது ஈழநாடு பத்திரிகை அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம் நடாத்தும் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான

மாபெரும் அஞ்சலோட்டப் போட்டி-2004

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான அஞ்சலோட்டப் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது.

பிரிவுகள்: 17 வயதிற்குட்பட்டோர் ஆண், பெண் 4X200
20 வயதிற்குட்பட்டோர் ஆண், பெண் 4X200

பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் தமது அணி வீரர்களின் விபரங்களை எதிர்வரும் 24.04.2004 சனிக்கிழமைக்கு முன்னதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

போட்டி ஒழுங்கமைப்பாளர்,
விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# பெறுமதி வாய்ந்த முத்திரைகளுக்கு தட்டுப்பாடு

யாழ்.பிரதான தபாலகத்தில் பெறுமதி வாய்ந்த முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் இந்தப் பெறுமதிவாய்ந்த முத்திரைகள் ஒழுங்காகக் கிடைக்கப்பெற்றன. எனினும், தற்போது பெறுமதி வாய்ந்த முத்திரைகள் அதிகளவில் தேவைப்படாமையால், தாம் அவற்றைப் பெறமுயற்சிக்கவில்லை என யாழ்.பிரதம தபாலக அதிகாரி தெரிவித்தார்.

எனினும், சில அத்தியாவசியப் பணிகளுக்கு இந்த முத்திரைகள் தற்போதும் தேவைப்படுவதாகப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

# வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்துவதற்கு விசேட திட்டம்

## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவிப்பு

வடக்கு-கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்தல் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கென விசேடதிட்டமொன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையொன்றை நடத்தியுள்ளார்.

புனர்வாழ்வு மீள்குடியமர்தலுடன் தொடர்புடைய நிறுவனங்கள் அனைத்தையும் இணைக்கின்ற மத்திய நிறுவனமொன்றினூடாக இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

2000 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியமர்தல் திட்டத்தை அனுபவமும் தகைமையுடையவர்களையும் இணைத்துக்கொண்டு உரியவிதத்தில் மீளச்செயற்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பாக ஜனாதிபதி மாளிகையில் விசேடகூட்டமொன்று நடைபெற்றது.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட மோதல்களால் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்துவதிலுள்ள சிக்கல்கள் தொடர்பாக முக்கியமாக ஆராயப்பட்டது.

இந்த நடவடிக்கைகளின்போது, ஏற்படும் நிறுவனரீதியான பிரச்சினைகளை யுனிசெவ், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யு.என்.எச்.சி.ஆர் அகியவற்றின் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துதலிலுள்ள சிக்கல்கள், அவர்களின் அன்றாட உணவு, உலர் உணவு பகிர்ந்தளித்தல் மற்றும் அவர்களது கல்வி, சுகாதாரம் தொடாபான பிரச்சினைகள் என்பன இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்த விசேட கூட்டத்தில் அமைசச் பேரியல் அஷ்ரப், கிழக்கு மாகாண மாவட்டச் செயலர்கள், வட-கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜயவர்த்தன, ஜனாதிபதி செயலக உயரதிகாரிகள் ஆகியோர் கலந்துகொணடனர்.

# கிழக்குப் பல்கலைக்கழகம் வழமைக்குத் திரும்பியது!

## பரீட்சைகள் 27 ஆம் திகதி ஆரம்பம்

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழகம் மீண்டும் வழமைநிலைக்குத் திரும்பியுள்ளதாக அந்தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி எஸ். ரவீந்திரநாத் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உள்ளகப் பரீட்சைகள் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளபோதிலும், பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதாகவும், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சைவ எழுச்சிப் பெருவிழா

சைவ நீதிமன்றம் நடத்தும் சைவ எழுச்சிப் பெருவிழா நாளையும், நாளை மறுதினமும் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் மூன்று அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வில் சைவ நீதி 8 ஆவது ஆண்டு மலர் வெளியிடப்படவுள்ளது.

## தடைசெய்யப்பட்ட வலைகள்

# பாவிப்பதற்கு எதிராக மட்டக்களப்பில் பேரணி!

மட்டக்களப்பு வாவிகளில் டிஸ்கோ மற்றும் மாயவலைகளைப் பயன்படுத்தி மண்பிடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்றுமுன்தினம் காத்தான்குடியில் எதிர்ப்புப்பேரணி நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாவிகளில் இந்த வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதால் மீனினங்கள் அழிந்து வருகின்றன.

இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்தபோதிலும், எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படாததை அடுத்தே இந்தப் போராட்டத்தை நடத்தியதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை காத்தான்குடி பிரதான வீதியில் திரண்ட மக்கள், அந்த வீதியூடாகப் பேரணியாகச் சென்று, காத்தான்குடி பிரதேச செயலகத்தைச் சென்றடைந்து அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றினைக் கையளித்தனர்.



ஊனமுற்றோர்களுக்கான புனர்வாழ்வுத் தேசிய வேலைத் திட்டம் தொடர்பாக யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மாவையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படத்தில் காணலாம்.

## உயர்தரப் பரீட்சையில்

# ஆள் மாறாட்டம் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!

## பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு

நடைபெறவுள்ள க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்வோர் எவராவது கண்டுபிடிக்கப்பட்டால், அவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கப்படும் எனக் கல்வி அமைச்சு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவிததன.

க.பொ.த.சாதாரணதரம் முதல் க.பொ.த.உயர்தரப் பரீட்சைகள் வரை பல்வேறுபட்ட மோசடிகள்மூலம் சிலர் சித்தியடைகின்றனர்.

இவ்வாறு சித்தியடைபவர்கள் பலர் பல்கலைக்கழகங்களில்கூட கல்வி கற்கின்றனர்.


இவ்வாறானவர்கள் கண்டுபிடிக்கப்படுமிடத்தோ, சமூகநலன்மிக்கோரால் அடையாளம் காணப்படுமிடத்தோ அவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, இந்தமுறை நடைபெறவுள்ள க.பொ.த.உயர்தரப் பரீட்சை மிகவும் அவதானமானமுறையில் நடத்தப்படவுள்ளது. எவராவது தவறானமுறையில் பரீட்சைக்குத் தோற்றினால், அவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, அவ்வாறு தவறான நடவடிக்கையில் ஈடுபடுவோரின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படும் அளவிற்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இனிவரும் காலங்களில் இத்தகைய தவறுகள் நடைபெறாமல் இருக்கும் வகையில் மாணவர்களின் பாடசாலைமட்டக் கணிப்பீடுகளும், மரணவர்களின் பரீட்சைச் சான்றுப் பத்திரங்களில் உள்ளடக்கப்படவுள்ளன.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் இது பொருந்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்றும் கல்வி அமைச்சினால் கல்வி வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு க.பொ.த.உயர் தரப் பரீட்சை முதல் அறிமுகப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல சந்தித்துப் பேச்சு நடத்திய போது எடுக்கப்பட்ட படம்.

# முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க உயர் நீதிமன்றில் ஆஜராக உத்தரவு!

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவை எதிர்வரும் 7 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உயர்நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 3 ஆம் திகதி உனவட்டுவப் பிரதேசத்தில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க உயர்நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்துரைத்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டது.

இது தொடர்பாகச் சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்தார்.

இதேவேளை, பிரதிவாதிக்கான அழைப்பாணையைத் தாம் எஸ்பி.திஸநாயக்கவின் கொழும்பு வீட்டுக்கு எடுத்துச்சென்றபோதும், அங்கு அவர் இல்லாமையால், குறிப்பிட்ட அழைப்பாணையைச் சமர்ப்பிக்கமுடியவில்லை என நீதிமன்ற அதிகாரிகள்-பிரதம நீதியரசரின் கவனத்துக்குக் கொண்டுசென்றனர். (01)

# செல்வந்தரான அமைச்சர்கள் குறித்து லஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணை

(கொழும்பு)

முன்னைய அரசின் ஆட்சிக் காலங்களில் அமைச்சர்களாக இருந்த பலர் - திடீரென பெரும் செல்வந்தர்களாக மாறியது தொடர்பாக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்குக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான விபரங்களைத் திரட்டும் முயற்சியில் உரிய அதிகாரிகள் இறங்கியுள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் - தமது பொருளாதார நிலைமை பற்றித் தேர்தல் ஆணையாளருக்குத் தெரிவிக்க வேண்டும். எனினும், கடந்த தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் மூவர் மட்டுமே இதுவரையில் தமது சொத்துக்கள் பற்றிய விபரங்களைத் தெரியப்படுத்தியிருந்தனர்.

மேலும் கடந்தகால ஆட்சியின் போது, அமைச்சர்களாக இருந்தவர்களில் சிலருக்கு எதிராக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் அதேசமயம் - இவர்களது குடும்ப உறுப்பினர்களது சொத்துக்கள் மீதான கணிப்பீடு இடம்பெற்று வருகின்றது.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படுமானால், இவர்களுக்கு எதிராக உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மாகாணசபை பதவிக்காலம் ஆறாம் திகதியுடன் முடிவு

இலங்கையின் வடக்கு - கிழக்கு மற்றும் வடமேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய சகல மாகாணங்களுக்குமான தற்போதைய பதவிக்காலம் அடுத்த மாதம் ஆறாம் திகதிக்கு முன்னர் முடிவடைகின்றது.

அத்துடன், பதவிக்காலம் முடிந்து கலைக்கப்பட்ட வடமேல் மாகாண சபைக்கான தேர்தல் நாளை நடைபெறவுள்ளது.

இதன்படி சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணம் ஆகியவற்றின் பதவிக்காலம் எதிர்வரும் வெள்ளிக்கிழமையுடன் முடிவடைகின்றன. ஊவா மாகாணசபைக்கான பதவிக்காலம் எதிர்வரும் திங்களுடன் நிறைவடைகின்றது.

அத்துடன், வடமத்திய மற்றும் மேற்கு மாகாணங்களின் காலம் அடுத்தமாதம் ஆறாம் திகதியுடன் நிறைவடைகின்றது.

இதனிடையே வடமேல் மாகாண சபைக்கான தேர்தல் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இங்கு தேர்தல் சுதந்திரமாகவும், நீதியாகவும் நடப்பதற்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகப் பலமாக இடப்பட்டுள்ளதாகப் பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

## விமர்சனங்களால் விரக்தி

# பாகிஸ்தான் அணியிலிருந்து அக்தர் தற்காலிகமாக விலகல்


(லாகூர்)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியிலிருந்து விலக வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் முடிவுசெய்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் மற்றும் டெஸ்ட் கிரிக்கெட் தொடர் ஆகிய இரண்டிலும் பாகிஸ்தான் தோல்விகண்டது.

இந்தத் தொடரில் 'ராவல் பிண்டி எக்ஸ்பிரஸ்' என்று அழைக்கப்படும் சொகைப் அக்தர், எதிர்பார்த்தபடி வேகப் பந்துவீச்சில் ஜொலிக்கவில்லை.

கடிவாளத்துக்குக் கட்டுப்படாத குதிரைபோல் செயற்படக்கூடிய அக்தருக்கும், அணித்தலைவர் இன்ஸமாமுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

கடைசி டெஸ்ட்டில் அக்தர் பந்து வீசுகையில் மைதானத்தில் விழுந்தார். இதைத் தொடர்ந்து அவர் பந்துவீசாமல் வெளியேறினார். ஆனால், மறுநாள் அவர் காயமடையாத வீரர்போல் துடுப்பாட்டத்தில் வெளுத்து வாங்கினார். இதனால், அவர் காயமடையாமலே ஏமாற்றி வெளியேறினாரா என்று அணித்தலைவர் இன்ஸமாம் மறைமுகமாகச் சுட்டிக் காட்டியிருந்தார். இதனால், இருவருக்குமிடையேயான கருத்து வேறுபாடு அதிகரித்தது.

இந்த நிலையில் வீரர்கள் காயமடைந்தது உண்மை தானா என்பதை அறிய, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நான்குபேர் கொண்ட மருத்துவக் குழுவை நியமித்தது.

இதற்கிடையில், விமர்சனங்களால் மனவேதனை அடைந்த சொகைப் அக்தர், பாகிஸ்தான் அணியில் இருந்து விலக முடிவெடுத்திருப்பதாகத் தெரிகிறது.

அடுத்த மாதம் இலங்கை வந்து விளையாடும் பாகிஸ்தான் அணியில் இடம்பெறப்போவதில்லை என்று அவர் முடிவெடுத்திருப்பதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

விமர்சனத்தால் விரக்தியடைந்துள்ள அக்தர் இரண்டு மாத காலம் ஆட்டத்திலிருந்து ஒதுங்கியிருக்க முடிவு செய்துள்ளதாகப் பாகிஸ்தான் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஹரியர் கான் கூறுகையில் -

ராவல்பிண்டி டெஸ்ட்டில் அக்தர் காயமடையவில்லை. ஆர்வம் இல்லாமல் அவர் பங்கேற்கவில்லை. மருத்துவக் குழு விசாரணை முடிந்ததும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# ஊர்காவற்றுறை பிரதேச செயலக தடகள விளையாட்டுப் போட்டி!

## 25, 26 ஆம் திகதிகளில் நடைபெறும்

(நெடுந்தீவு)

ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் பிந்திய பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் காலை 6.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆண், பெண் வீரர்களுக்கான 5000 மீற்றர், 800 மீற்றர், 400 மீற்றர், 4x100 மீற்றர், அஞ்சல், ஈட்டி எறிதல், முப்பாய்ச்சல், உயரம் பாய்தல், தட்டெறிதல், பெண்களுக்கான குண்டெறிதல், ஆண்களுக்கான நீளம் பாய்தல் ஆகிய இறுதி நிகழ்வுகளும் ஆண், பெண் வீரர்களுக்கான 100 மீற்றர், 400 மீற்றர் தெரிவு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை ஆண், பெண் வீரர்களுக்கான 10 000 மீற்றர், 1500 மீற்றர், பெண்களுக்கான நீளம் பாய்தல் ஆகிய இறுதி நிகழ்வுகளும் ஆண், பெண் வீரர்களுக்கான 200 மீற்றர் தெரிவு நிகழ்வும் இடம்பெறும்.

இறுதிநாள் மாலை நிகழ்வில் ஆண்களுக்கான குண்டெறிதல் ஆண், பெண்களுக்கான 100 மீற்றர், 200 மீற்றர், 4X400 மீற்றர் அஞ்சல் ஆகிய இறுதி நிகழ்வும் இடம் பெறும்.

குறிப்பிட்ட போட்டிகளில் பங்குபெறும் வீர, வீராங்கனைகள் குறித்த நேரத்திற்குச் சமுகம் தந்து போட்டிகள் சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு வழங்குமாறு விளையாட்டு உத்தியோகத்தர் க.விஜிதரன் கேட்டுள்ளார்.

(113)

# பந்துவீச்சை சரிசெய்யாவிடின் ஒருவருட தடை விதிக்கப்படும்

## முரளிதரனுக்கு எச்சரிக்கை

இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரனின் பந்துவீச்சு பல முறை சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. சமீபத்தில் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடரில் முரளிதரனின் பந்துவீச்சுக் குறித்து சர்வதேச கிரிக்கெட் சபையிடம் புகார் செய்யப்பட்டது.

சர்வதேச கிரிக்கெட் சபை - முரளிதரனை அவுஸ்ரேலியாவில் உள்ள பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிப் பந்துவீச்சு ஆய்வு செய்தது. அதன்படி முரளிதரன் விதிமுறைகளை மீறிப் பந்து வீசுவதாகக் கூறியது. இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட்சபை மேலும் கூறியுள்ளதாவது-

ஒரு வருடத்திற்குள் முரளிதரன் மீது இரண்டுமுறை சந்தேகம் எழுந்துள்ளது. முரளிதரன் பந்துவீச்சை சரிசெய்துகொள்ள வேண்டும். தொடர்ந்து இதேபோல பந்து வீசினால், அவருக்கு ஓராண்டு காலம் தடை விதிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

## மாவட்டங்களுக்கு இடையிலான

# கூடைப்பந்தாட்டப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டம் சம்பியன்!

(மட்டக்களப்பு)

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்டங்களுக்கிடையே நடத்திய கூடைப்பந்து சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்டம் சம்பியனானது.

கடந்த சனிக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்ட இந்தப் போட்டி - ஞாயிற்றுக்கிழமை இரவு நிறைவடைந்தது. இறுதிப் போட்டியில் திருகோணமலை மாவட்ட அணியை எதிர்கொண்ட மட்டக்களப்பு மாவட்ட அணியினர் 52:48 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிகொண்டனர்.

அரையிறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியை எதிர்கொண்ட திருகோணமலை மாவட்ட அணி 62:60 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிகொண்டிருந்தது.

மற்றைய அரையிறுதிப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணி மன்னார் மாவட்ட அணியை 65:22 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிகொண்டது. (04)

விளையாட்டு

# மாகாணமட்ட போட்டிகள் யாழிலும் நடத்தப்படும்


வடக்கு - கிழக்கு மாகாணமட்ட விளையாட்டுப்போட்டிகள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த திங்கட்கிழமை திருகோணமலையில் - கல்வி, பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தில் வலைப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம் (ஆண், பெண்), கபடி (ஆண், பெண்) ஆகிய மூன்று விளையாட்டுக்களும் நடைபெறவுள்ளன.

வலைப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம் - மே மாதம் 8 ஆம், 9 ஆம் திகதிகளிலும், கபடி - யூன் 19 ஆம், 20 ஆம் திகதிகளிலும் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மாகாணமட்டப் போட்டிகளில் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த துறைசார்ந்த அணிகள் பங்குபற்றுகின்றன என யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி தெரிவித்தார். (தீ)


மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைப் பெற்று மாகாணப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியின் 17 வயதுப் பிரிவினரையும், அதிபர் கி.நடராஜா, விளையாட்டுப் பொறுப்பாசிரியர் ச.செல்வக்குமரன், அணிப் பயிற்றுநர் இ.வசீகரன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# இலங்கை அணி 9 விக்கெட்டுக்களால் சிம்பாப்வே அணியைத் தோற்கடித்தது!

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் நேற்று புளவாயோவில் நடந்த இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டியிலும் இலங்கை அணி 9 விக்கெட்டுக்களால் சிம்பாப்வேயைத் தோற்கடித்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. எனவே, சிம்பாப்வே அணி துடுப்பெடுத்தாடியது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி தனது முதலாவது ஓவரிலேயே ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சிபாண்டாவின் விக்கெட்டை இழந்தது.

இதன் பின்னர் துடுப்பெடுத்தாட வந்த சிம்பாப்வே வீரர்கள் எவரையும் நிலைத்து நின்று ஆட முதல் பத்து ஓவருக்குள் சமிந்தவாஸும் பின்னைய ஓவருக்குள் முரளியும் விடவில்லை. 36.4 ஓவர்கள் நிறைவில் சிம்பாப்வே அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 136 ஓட்டங்களையே பெற்றது.

சிம்பாப்வே அணி சார்பில் தைபு 35, உற்சேயா ஆட்டமிழக்காமல் 25, மற்ஸ்ஹெஸன்யறி 18, இப்ராஹிம் 16 ஆகியோர் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சமிந்தவாஸ் மற்றும் முரளிதரன் இருவரும் தலா நான்கு விக்கெட்டுக்களையும், ஜெயசூர்யா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 137 ஓட்டங்கள் எடுத்தால், வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி 20.5 ஓவர்களில் ஜெயசூர்யாவின் விக்கெட்டை மட்டும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கை அணியில் நேற்றைய ஆரம்பத் துடுப்பாட்ட வரிசையில் மாற்றம் இருந்தது. இதன்படி சனத் ஜெயசூர்யாவுடன், அணிக்கு மீள அழைக்கப்பட்ட ஜெயந்த, அத்தபத்துவுக்குப் பதிலாக இணைந்து கொண்டார்.

இருவரும் சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கையில் ஜெயசூரியா 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன்பின் ஜெயந்தவுடன் அணித் தலைவர் அத்தபத்துவும் இணைந்து அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றனர்.



இதன்படி - ஜெயந்த 64 பந்துகளில் 12 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 74 ஓட்டங்களையும், அத்தபத்து 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பன்யான்ஹரா மட்டும் ஜெயசூரியாவின் விக்கெட்டைக் கைப்பற்றினார்.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது போட்டி நாளை மறுதினம் ஹராரேயில் நடைபெறவுள்ளது. நேற்றைய போட்டியில் ஆட்டநாயகனாக சமிந்தவாஸ் தெரிவானார்.

## மாவட்ட மட்ட உதைபந்தாட்டம்

# நெல்லியடி மத்திய ம.வி. அணி சம்பியனாகத் தெரிவானது

கடந்த 21 ஆம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் பாடசாலைகளுக்கிடையேயான மாவட்ட மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்றது. இதில் 17, 19 வயது பிரிவுகளில் யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் சம்பியன் பட்டத்தைப் பெற்றது.

17 வயதுப் பிரிவில் - யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தை எதிர்த்து யா/வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயம் மோதியது.

இதில் இடைவேளைக்கு முன்னர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி வீரன் உமேஸ் ஒரு கோல் அடித்தார். ஆட்டம் முடிவதற்கு ஒரு நிமிடம் இருக்கும்வேளை வேலணை மத்திய மகாவித்தியாலய வீரன் எஸ்.கோகுலதாசனால் ஒரு கோல் அடிக்கப்பட்டது.

இரண்டும் சமபுள்ளியாகையால் கோல்டன் கோல் முறையில் ஆட்டம் தொடங்கப்பட்டது. ஆட்டம் தொடங்கி 23 ஆவது செக்கனில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி வீரன் நளினிக்காந்தால் கோல் அடிக்கப்பட்டது. இதன்மூலம் இந்த அணி சம்பியன் பட்டத்தைப் பெற்றது.

19 வயதுப் பிரிவில் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி மோதியது. இதில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் 3:2 என்ற கோல் அடிப்படையில் சென். பற்றிக்ஸ் கல்லூரியை வென்றது.

இதில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி வீரன் கணேஸ்குமார் 02 கோல்களையும் குலராஜ் 01 கோலையும் அடித்தனர்.

மாவட்ட மட்டத்தில் முதல் இரு இடங்களையும் பெற்ற பாடசாலைகள், மாகாணப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளதெனவும், நடைபெற்ற உதைபந்தாட்டத்திற்கு மத்தியஸ்தர்களாக ஏ.எவ்.செபமாலைமுத்து, சண்.தயாளன், எஸ்.குமரேசன் ஆகியோரும் கடமையாற்றினர் எனவும் யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுக் குழுச் செயலாளர் தெரிவித்தார்.

(12)



அண்மையில் வெளியான 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் - மாவட்ட ரீதியாக 7 ஆம் இடத்தைப் பெற்ற கரவெட்டி திரு இருதயக்கல்லூரி மாணவி பு.நிலுக்சிக்கு நெல்லியடி கொமர்ஷல் வங்கி முகாமையாளர் எஸ்.கே. குணசிங்கம் பத்தாயிரம் ரூபா காசோலையை வழங்குவதையும் அருகில் மாணவியின் பெற்றோர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (116)

# மேதின எழுச்சிக் கூட்டங்களை பெருமெடுப்பில் நடத்த ஏற்பாடு

## புதிய ஜனநாயகக்கட்சி அறிவிப்பு

மேதினத்தன்று யாழ்ப்பாணத்தி லும், இராகலை பகுதியிலும் மே தின எழுச்சிக்கூட்டங்களைப் பெரு மெடுப்பில் நடத்தப்போவதாக புதிய ஜனநாயகக்கட்சி அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில், யாழ்.பலநோக் குக் கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெறும் மேதின எழுச் சிக்கூட்டத்தில் -

புதிய ஜனநாயகக்கட்சியின் தலைவர் சி.கா.செந்திவேல், வட பிராந்திய செயலாளர் கா.கதிர்காமத் தம்பி, சோ.தேவராஜா மற்றும் க.தணி காசலம் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றுவர்.

இதேவேளை, இராகலைப் பகுதி யில் மேதின எழுச்சிப்பேரணியும், முடிவில் பொதுக்கூட்டமும் இடம் பெறவுள்ளதாகத் தெரியவருகின் றது.

இந்தக் கூட்டத்தில் புதிய ஜன நாயகக் கட்சியின் தேசிய அமைப் பாளர் இ.தம்பையா உட்பட முக்கி யஸ்தர்கள் பலரும் சிறப்புரைகளை ஆற்றுவர்.

அடக்கப்பட்ட மக்களின் உரி மைக் குரலாக இந்த மேதினம் எழுச் சியை அனுஷ்டிக்கப்போவதாக அந்தக்கட்சி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்தது. (202)

# முஸ்லிம் குடியிருப்புகளிலிருந்து படையினர் வெளியேற மறுப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப்பகுதியி லுள்ள முஸ்லிம் மக்களது குடியி ருப்புக்களிலிருந்து படையினர் வெளி யேற மறுத்து வருவதால், மீளக் குடியமர வந்திருந்த முஸ்லிம் குடும் பங்கள் - தொடர்ந்து அகதி வாழ்க் கையினை வாழவேண்டியநிலை தோன்றியுள்ளது.

இந்தநிலையில், மீளக்குடியமர வந்த குடும்பங்கள் தற்போது சாவ கச்சேரி ஜும்மா பள்ளிவாசலில் தற் காலிகமாகத் தங்கவைக்கப்பட் டுள்ளனர்.

புத்தளம் பகுதியிலிருந்து மீளக் குடியமர வந்த ஐந்திற்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்களை, அவர்க ளுடைய சொந்த வீடுகளுக்குத் திரும்ப படைத்தரப்பு அனுமதித் திருக்கவில்லையெனத் தென்மராட்சி பிரதேச செயலர் - யாழ்.படைத்தல மைக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

1990 ஆம் ஆண்டின் இறுதியில் யாழ்.குடாநாட்டிலிருந்து வெளியேற் றப்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் படிப் படியாகத் தற்போது மீளக் குடிய மர்ந்துவருகின்றன. குறிப்பாக யாழ். நகரை அண்டியுள்ள முஸ்லிம் பகுதி களிலும் இந்தக் குடும்பங்கள் மீளக் குடியமர்ந்து வருகின்றன.

இவ்வாறு சாவகச்சேரி பகுதியி லிருந்து இடம்பெயர்து, புத்தளம் பகுதியில் வசித்துவந்த இந்த முஸ்லிம் குடும்பங்களே, தற்போது மீளக்குடியமரும் நோக்கில் சாவகச் சேரி திரும்பியுள்ளன. (202)

# இலவச பாடநூல்கள் கிடைக்காமையால் மாணவர்களின் கல்விநிலை பாதிப்பு

பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடநூல்கள் இன்னமும் முழுமையாக வந்து சேராமையி னால், மாணவர்களின் கல்வி பெரி தும் பாதிக்கப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரி வித்தன.

குறிப்பாக, யாழ்.மாவட்ட பாட சலை மாணவர்களுக்கே இந்த நிலமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

ஒவ்வொரு வருடமும் முதலாம் தவணை ஆரம்பிக்கின்ற காலத் திற்கு முன்னதாகவே இலவச பாட நூல்கள் அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

சமாதானம் ஏற்பட்டுள்ள இந்தக் காலகட்டத்தில் குடாநாட்டிற்கு இல வசப் பாடநூல்கள அனுப்பி வைகைப் படாதது - குடாநாட்டு மாணவர்க ளின் கல்விநிலையைக் கட்டுப்ப டுத்தும் நடவடிக்கையென சந்தே கிக்க இடமளிப்பதாகப் புத்திஜீவி கள் தெரிவித்தனர்.

இரண்டாம் தவணை ஆரம்பமா கியும் தரம் 6 இர்கான புதிய பாடத் திட்டத்திற்குரிய நூல்கள் முழுமை யாக வராமை, மிகவும் வேதனைக் குரியவிடயம் எனப் பாடசாலைச் சமூ கம் கவலை தெரிவித்துள்ளது.(122)

# இடநெருக்கடி காரணமாக தொற்றுநோய் பரவும் ஆபத்து

## யாழ்.சிறையில் புதிய பிரச்சினை

இடநெருக்கடி காரணமாக யாழ். சிறைச்சாலையில் தொற்றுநோய்கள் பரவும் ஆபத்து தோன்றியிருப்பதாக யாழ்.சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண சிறைச்சாலைக்கான நிரந்தர கட்டட வசதி இல்லாதநிலை யில், தனியார் கட்டடம் ஒன்றிலேயே இச்சிறைச்சாலை தற்போது இயங்கி வருகிறது.

இந்தக் கட்டடத்தில் 120 பேர் வரையிலே தடுத்துவைக்கக்கூடிய வசதி இருக்கின்றபோதிலும், தற் போது 306 பேர் இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், அங்கு பல தொற்றுநோய்கள் பரவக்கூடிய ஆபத்துநிலை உருவாகியுள்ளது. தற் போது அங்கு சின்னமுத்து எனப் படும் வெம்மைநோய் எட்டுப்பே ருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நோய் தொடர்ந்தும் பரவு மாக இருந்தால், பாரதூரமான விளைவை ஏற்படுத்திவிடும்.

நோயால் பாதிக்கப்பட்டவர்க ளுக்குத் தனியறை கொடுக்கப்பட் டுள்ளபோதிலும், இடநெருக்கடிப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் பல் வேறு சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிவரும் எனவும், தான் எதிர் பார்ப்பதாகவும் அந்த அதிகாரி தெரி வித்தார். (ப)

# நெடுந்தீவு பிரதேச செயலக அபிவிருத்திக்குழுக் கூட்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவுக்கான பிரதேச அபிவிருத்தி - அபி விருத்திக்குழுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், உணவு, குடிநீர் விநியோகம் மற்றும் பிரதேச அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த சில கூட்டங்களுக்கு - தீவுக்கான போக்குவரத்துச் சேவையுடன் தொடர்புடைய அதிகாரிகள் சமுகமளிக்காமை குறித்து, கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் எதிர்ப்புத்தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (113)

# மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் சவுக்கு மரங்கள் வெட்டப்படுகின்றன

மணக்காடு, குடத்தனைப் பகுதி களில் பெருமளவு சவுக்கு மரங்கள் வெட்டிச்செல்லப்படுவதாகப் பொது மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக வாக னங்களிலும், மோட்டார் சைக்கிள் களிலும் துவிச்சக்கர வண்டிகளிலும் நூற்றுக்கணக்கானோர் இப்பகுதியில் உள்ள சவுக்கு மரங்களைப் பச்சை யாக வெட்டி, விறகுக்காக விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

விறகுக்கெனப் பச்சை மரங்கள் வெட்டும் நடவடிக்கை தொடருமா னால், இப்பிரதேசத்திலுள்ள சவுக்கு மரங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு, சூழல் மாசடைவதோடு மண்ணரிப் பும் ஏற்படும் அபாயம் தோன்றும் என பொது ஸ்தாபனங்கள் கவலை தெரிவித்தன.

குறிப்பாக கடந்த சில நாட்க ளாகப் பகல் நேரங்களிலேயே இந்த மரங்கள் வெட்டிச்செல்லப்படுவதா கவும், பொலிஸாரும் இராணுவத்தி னரும் இதற்கான எந்த நடவடிக் கையும் எடுக்காமை குறித்து அப் பகுதி மக்கள் அதிகாரிகளுக்கு விச னம் தெரிவித்தனர். (122)

# சின்னஞ்சிறு செய்திகள்

## அரியாலையில் இரு குழுக்களிடையே மோதல்

(யாழ்ப்பாணம்)

அரியாலை காந்தி சனசமூக நிலையத்துக்கு அருகில் இரு குழுக்களிடையே மோதல் சம்ப வங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த சனசமூக நிலையத்தில் ஆண்டுவிழா நிகழ்வுகள் நடை பெற்றவேளை, இரு குழுக்களுக் கிடையே ஏற்பட்ட வாய்த்தகராறே மோதல் உருவாகக் காரணம் எனத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தில் நான்கு மோட்டார் சைக்கிள்கள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. கடந்த 18 ஆம் திகதி தொடங்கிய இந்த மோதல் சம்பவங்களானது மறுநா ளும் தொடர்ந்தது.

எனினும், குறிப்பிட்ட சனசமூக நிலைய மக்கள் மோதல்களை விரும்பாது, நாகரிகமானமுறையில் சமரசமாகப் பிரச்சினையைத் தீர்க் கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (55)

## மீன்வியாபாரிகள் சரியான நிறுத்தல் அளவைகளை பாவிப்பதில்லை

கல்வியங்காடு மீன் சந்தை பகு தியில் மீன்விற்பனை செய்யும் வியா பாரிகள் சரியான நிறுத்தல் அள வைகளைப் பாவிப்பதில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக் கின்றனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கல்வியங்காடு மீன்சந்தையா னது மிக அதிகளவில் வியாபாரிக ளும், பொதுமக்களும் கூடும் பகுதி யாகும். இங்கு வியாபாரிகள் சன நெருக்கடியைப் பாவித்து நிறுத்தல் அளவுகளுக்கு முத்திரை இடப்ப டாத தராசுகள், படிகள் என்பனவற் றுடன், துவிச்சக்கரவண்டிச் சில்லு அச்சு, என்பவற்றையும் நிறுவை படிகளாகப் பாவிக்கின்றனர்.

அத்துடன், வியாபாரிகள் பெரும் பாலும் மதுபோதையில் இருந்தே வியாபார நவடிக்கைகளை மேற் கொள்வதுடன், தூசன வார்த்தை களைப் பேசுவதால் - பொதுமக்கள் பல அசௌகரிகங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவ டிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். (205)

## மாணவிகளை தகாதவார்த்தைகளால் பேசியோர் நையப்புடைப்பு

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் மாணவிகளைத் தகாத வார்த்தைகளினால் ஏசி யவர்கள் - சகமாணவர்களால் நையப்புடைக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் சைக்கிளில் மதுபோதையில் வந்த இளைஞர்கள் இருவர் - யாழ்.பல்க லைக்கழக உடற்கல்வி டிப்ளோமா மாணவிகளைத் தகாத வார்த்தை களால் ஏசினர்.

மாணவிகள் தமது சக மாணவர் களிடம் முறையிட்டதைத் தொடர்ந்து, குறிப்பிட்ட இருவரையும் துரத்திச் சென்ற மாணவர்கள், கலட்டிச் சந் திப் பகுதியில் வைத்து இருவரை யும் தாக்கினர்.

பின்னர் அந்தவிடத்துக்கு வந்த பொதுமக்கள் இருவரையும் எச்ச ரித்து விடுவிக்குமாறு மாணவர்க ளிடம் கோரியதை அடுத்து, இருவ ரும் விடுவிக்கப்பட்டனர்.

## வங்கமொழித் திரைப்படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழகத் திரைப் பட வட்டத்தினரது ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை பி.ப 3 மணிக் குப் புவியியற்துறை மண்டபத்தில் பிரபல திரைப்பட விமர்சகரான சிதானந்ததாஸ் குப்தாவின் நெறி யாள்கையில் உருவான - 'அமோ தினி' எனும் வங்க மொழித் திரைப் படம், தமிழ்த் துணைத் தலைப்புக் களுடன் விடியோக் காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது.

இந்தப் படத்துடன் இணைந்த நிகழ்வாக - வட இந்தியக் கலை ஞர் மாலினி முகர்ஜியின் இசை நிகழ்வும் விடியோக் காட்சியாக இடம்பெறவுள்ளது.

படக்காட்சிகளின் இறுதியில் எழுத்தாளர்கள் அ.யேசுராசா, க.சட் டநாதன், விமர்சகர் ஏ.ஜே.கனகரத் தினா ஆகியோரின் நெறிப்படுத் தலின்கீழ் இந்த படங்கள் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெறவுள்ளது.

முன்னர் வழங்கமாக ஞாயிறு மு.ப. இடம்பெற்ற விடியோக் காடசி, எதிர்வரும் நாட்களில் சனிக்கிழ மைகளில் பி.ப. 3 மணிக்கு இடம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரே வீதியில் இரு திருட்டுச் சம்பவங்கள்

அரியாலை வேலப்பர் வீதியில் கடந்த திங்கட்கிழமை ஒரேநாளில் இரு வீடுகளில் திருட்டுச் சம்பவங் கள் இடம்பெற்றன.

அதிகாலைவேளை, வேலப்பர் வீதியிலுள்ள ஒரு வீட்டில் ஜன்னல் உடைத்து உட்புகுந்த திருடர்கள், அங்கிருந்த 10 ஆயிரம் ரூபா பணத் தையும், 50 ஆயிரம் ரூபா பெறு மதியுள்ள நகைகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

அதேதினம் அந்தவீட்டை அண்டி யுள்ள வீட்டிலும் அதிகாலைவேளை கதவை உடைத்து உட்புகுந்த திரு டர்கள், ஒரு தொகைப் பணம் மற்றும் நகைகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகப் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். (55)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்



பெயர் : தெ.டி.லெக்சிகா

முகவரி : இல 118 2 ஆம் யூனிற், பாலிநகர், வவுனியா

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :----------

முகவரி:----------

பிறந்த ஆண்டு:----------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------

பெற்றோர் ஒப்பம்



# சிநேகிதியே

## நல்லதோ கெட்டதோ அறிந்து செயலாற்றும் திறமை பெண்களிடம் அதிகமாகிவருகிறது

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில், 521 ஆம் இலக்கத்திலுள்ள அருள்நாதன் சகுந்தலாதேவி என்பவரை அவரது இல்லத்தில் சென்று சிநேகிதியே பகுதிக்காக நேர்காணல் ஒன்றினைத் மேற்கொண்டபோது, அவர் எம்முடன் பகிர்ந்துகொண்ட கருத்துக்களை வாசகர்களுக்குப் தருகின்றோம்.

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் உயர்தரம்வரை கல்வி பயின்று அதன் பலனாக மாணவர்களுக்குப் கற்பித்து, பின்பு திருமணம் முடித்து மூன்று பிள்ளைகளின் தாயாக பிள்ளைகளுக்கு சேவை செய்துவருகின்றேன். இதற்கிடையில் அருச்சுனா நூலகம், அருச்சுனா றப்பர் முத்திரை, அருச்சுனா ஓட்டைக்கல் உற்பத்தி - அதாவது வீட்டிற்குத் தேவைப்படும் பூச்சாடி, கிறில் போன்றவற்றை செய்து கொடுத்தல். இப்படியாக வாழ்க்கையோடு தொழிலும் சேர்ந்து நகர்கின்றது. இன்றைய சமூகத்தில் இவ்வளவு வேலைகளையும் செய்தும், எமது தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் நிறையவே வெற்றிடமாக இருக்கின்றன.

அந்த நாட்களில் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு நாங்கள் போவதில்லை. காலை 8 மணிக்குப் பள்ளிக்குப்போனால் சலசலத்து சத்தம்போட்டு, பாடநேரம் அமைதியாகப் படித்துவிட்டு, பாடசாலை விட்டு வெளியேவரும் அந்த நாட்கள் இனிமையானது. ஆனால், இன்றைய இயந்திர வாழ்க்கைககு என்னால் ஒத்துப்போகமுடியவிலலை. எப்படித்தான் இன்றைய காலத்துப் பெண்கள் ஓடியோடி வாழ்க்கையை நகர்த்துகின்றார்களோ தெரியவில்லை. அதுவும் ஒரு கெட்டிக்காரத்தனம் என்றுதான் சொல்லவேண்டும். அதாவது பெண்களின் வளர்ச்சி இப்போது பிரமிக்கும்படியுள்ளது.

எனது கணவரும் நானும் சேர்ந்து செய்துவரும் தொழில்களில் எனக்குப் பிடித்தது நூல்நிலையமாகும். இதன் பொறுப்பு முழுவதையும் என்னிடமே எனது கணவர் ஒப்படைத்துள்ளார். ஆரம்பநாட்களில் நூலின்மீது எனக்கு ஒரு ஆர்வம் இருந்தது. எந்த நூலாக இருந்தாலும், வாங்கிப்படிப்பேன். அர்ச்சுனா நூலகத்தில் இருக்கும் அரைவாசிக்கு மேலுள்ள புத்தகங்கள் நான் படிப்பதற்காக வாங்கிய புத்தகங்கள் ஆகும். இதனால் தான் நூலகத்தினை உருவாக்க வேண்டிய விருப்பம் என்னிடம் வந்தது. பல எழுத்தாளர்கள் எழுதிய கதைப்புத்தகங்கள், பெண்களுக்கான புத்தகங்கள், சிறுவர்களுக்கான புத்தகங்கள், மருந்துவம் சம்பந்தமான புத்தகங்கள், இவ்வாறு பல புத்தகங்களை விரும்பி வாங்குவேன். இன்று இந்த புத்தகங்களைப் படிப்பதற்கு 200 பேர் வரை அங்கத்தவர்களாக இருக்கின்றார்கள்.

றப்பர் முத்திரை செய்வதற்கு திறமான ஒரு பெண்வேலையாளரை வேலைக்கு அமர்ததி இருக்கின்றேன். றப்பர் முத்திரை செய்வதற்கு வருபவர்கள், தங்களை உறுதிப்படுத்துவதறகு கொண்டுவரும் ஆவணங்களைப் பார்த்துவிட்டுத்தான், றப்பர் முத்திரைகளைச் செய்து கொடுப்போம். எனது கணவர் சாரதியாக வேலை செய்தார். ஒரு நிரந்தரத் தொழிலாக இருக்கவேணடும் என்பதால் வீட்டுக்குத் தேவையான கிறில்கள், பூச்சாடிகள் என்பவற்றைப் பல தொழிலாளர்களை வேலையில் ஈடுபடுத்தி பூரணமாகச் செய்துவருகின்றார். புதிய தொழில்நுட்ப வசதிகளைக்கொண்டு இந்தத் தொழிலினை மேற்கொள்வதில்லை, எம்மிடம் வேலை செய்கின்றவர்களே விதம்விதமான அச்சு



சகுந்தலாதேவி

களை உருவாக்கி, பொருட்களைத் தயாரிக்கின்றனர். வேலைக்கு ஆட்களை அமர்த்தி நாங்கள் தொழிலில் ஈடுபடும்போது தொழிலார்களும், முதலாளியும் சமமான இலாபத்தினைத்தான பெறமுடியும், இன்றைய காலத்தில் அவ்வளவு சம்பளம் ஒரு தொழிலாளிக்குக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் ஒரு வேலையாளரை பணியில் தொடர்ந்து வைத்திருக்க முடியும்.

வாடகை வீட்டில்தான் எங்களுடைய வாழ்க்கை நகர்கின்றது. இன்றைய காலத்தில் வெளிநாட்டிலிருந்து சம்பாதித்துவிட்டு, இங்கே வந்து வாய்க்கு வந்தபடி விலைபேசி நிலத்தினையோ, வீட்டினையோ வாங்கி விடுகின்றார்கள். இதனால் இந்த மண்ணில் தொழில் செய்து முன்னேறி வருகின்றவர்கள் - வீடு வாங்குவது என்பது கற்பனையாகத்தான் இருக்கினறது. அந்தளவிற்கு யாழ்ப்பாணத்தில் சொத்துக்களின் விலையினை ஏற்றிவிட்டிருக்கின்றார்கள்.

எல்லாவீடுகளிலும் ஒருவராவது வெளிநாட்டில் இருக்கின்றார்கள். எனக்கு வெளிநாடு போவதற்கு விரும்பமேயில்லை. எனது மூத்த மகன் வெளிநாடு போகப்போகிறான். எனது மகன் வெளிநாடு சென்று உழைத்து என்னை கூப்பிட்டாலும், நான் அங்கே போகமாட்டேன். ஏனெனில், இந்த சொந்த மண்ணில் கூழோ, கஞ்சியோ குடித்துவிட்டு நிம்மதியாகத் தூங்கி விடுவேன். சொந்த மண்போல் எந்த இடமும் இருக்காது.

யாழ்ப்பாண மக்களைப் பெரிதும் பாதித்தது யுதததம்தான். இந்திய இராணுவகாலப் பகுதி நாளுக்குநாள் சுற்றிவளைப்புக்கள், கைதுகள், இரவு பகல் என்று பாராமல் வீட்டுக்குள் நுழைந்து சோதனைசெய்தல் இப்படியாக நடைபெற்ற காலப்பகுதியில், நானும் எனது கணவரும், மூன்று பிள்ளைகளும், வேலணையில் இருந்து கடல் வழியே இந்தியா சென்றோம். இராமேஸ்வரத்திலுள்ள மண்டபம் அகதிகள் முகாமில் 3 மாதங்கள்தான் இருக்கமுடிந்தது. மறுபடியும் திரும்பி கடல் வழியே யாழ்ப்பாணம் வந்தோம். யுத்தம் நடக்கும் பிரதேசத்திலிருந்து செத்தாலும் பரவாயில்லையென்றுதான். ஏனெனில், மண்டபம் முகாமில் மனிதர்கள் இருக்கமுடியாதநிலையே உள்ளது.

நலலதோ, கெட்டதோ அறிந்து செயலாற்றுகின்·· திறமை பெண்களிடம் இருக்கின்றது. சினிமாவினைப் பார்த்து அதற்குள் நல்லவற்றைத் தெரிவுசெய்தல் வேண்டும். நல்ல விடயங்களும் கெட்ட வி..யங்களும் சினி மாவில் உண்டு. எனது பிள்ளைகளை நான் கட்டுப்படுத்துவதும் இல்லை அவர்கள் அதற்கேற்ப எது எது வாழ்க்கையில் முக்கியமோ அதில் மட்டும் கவனம் செலுத்திவருகின்றார்கள்.

கல்வி முக்கியமானதொன்று. இன்று படித்தவர்கள் படிப்புககேற்ற தொழில் கிடைககாவிடின், வேறு தொழிலினை மேற்கொள்ளலாம். அதற்காகப் படித்தும் என்ன இலாபம் என்று சொல்லமுடியாது. எமது அறிவுக்குக் கட்டாயம் படிக்கவேண்டும். பணம் மனிதனுக்குத் தேவையானதொனறுதான். ஆனால், வெளிநாட்டுப் பணம் இங்கே உலாவருவதால், என்ன செய்வது என்று தெரியாமல் ஆடம்பரமாகச் செலவு செய்கின்றார்கள்.

நவநாகரிகம் என்று வாழ்க்கைக்குத் தேவையில்லாதவற்றை எல்லாம் பூர்த்திசெய்து கொள்கின்றார்கள். ஆரம்பநாட்களில் இயற்கையான அழகு இருந்தது. இன்று செயற்கையான அழகு இருக்கின்றது. எது அழகில்லையோ அதைத்தான் அழகு என்று நினைத்துக்கொணடிருக்கின்றார்கள்.


வீட்டிற்கு நான்கு வாசல் இருக்கும், தெருவுக்கு நான்கு சந்தி இருக்கும், ஊருக்கு நாலு கோயில் இருக்கும், நல்ல நண்பர்கள், எதிரிகள் எங்களுடைய வாழ்கைக்கு வாழ்கின்ற தன்மைக்கேற்ப மாறுபடும். இவை அனைத்தையும் எதிர்கொண்டு வாழ்வதுதான் வாழ்க்கை என்று கூறிமுடித்தார்.

நேர்காணல் - செல்வா.

## 40 வயதிற்கு பிறகும் இளமையுடன் மிளிர

நமது நாட்டுப் பெண்களைப் பொறுத்தவரைக்கும் திருமணமாகி ஒரு சில ஆண்டுகள் மட்டுமே பெண்கள் அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். வயது ஏற ஏற அழகின் மீது உதாசீனம் அதிகரிக்கிறது. குழந்தை பெற்றவுடன் அவர்கள் பராமரிப்பதிலேயே தங்களின் பெரும்பாலான நேரத்தைச் செலவிடுபவர்கள் தங்களைப் பற்றி சிறிதளவேனும் சிந்திக்கத் தவறிவிடுகிறார்கள்.

பொரும்பாலும் 20 முதல் 24 வயதுக்குள் நமது நாட்டுப் பெண்கள் திருமணம் செய்துவிடுகிறார்கள். 27 வயதுக்குள் 2 அல்லது 3 குழந்தைகளைப் பெற்றுவிடுகிறார்கள். 45 வயதுக்குள் இவர்களுக்குப் பேரன், பேர்த்திகூடப் பிறந்துவிடுகிறார்கள். இதனால், பெரும்பாலான பெண்கள் - தாங்கள் பாட்டி ஆகிவிட்டோமே, அதற்குப் பிறகு என்ன அலங்காரம் வேண்டிக் கிடக்கு என்று அழகு பராமரிப்புக்கு எந்தவித முக்கியத்துவமும் கொடுப்பதில்லை.



40 வயதுக்குப் பிறகும் வாழ்க்கையில் எத்தனையோ இனிமையான விடயங்கள் உள்ளன. கொஞ்சம் ஆர்வமும் மனவுறுதியும் இருந்தால் போதும். வாழ்க்கையில் இரண்டாம் பாகத்தை இனிமையாகக் கழிக்கமுடியும்.

இன்றைய காலகட்டத்தில் பெண்கள் 40 வயதுக்குப் பிறகு, அழகுடன் இருப்பது அவசியம். உங்களின் நடை, உடை பாவனைகளைப் பொறுத்தே, உங்களின் குடும்பத்தையும், குழந்தைகளையும் மற்றவர்கள் எடைபோடுவார்கள்.

40 வயது வந்தவர்கள் தகுந்த வெளியில் அவ்வப்போது மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ளலாம். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவேண்டும். முதல் நாள் மிஞ்சிய உணவுகளைச் சாப்பிடுவது, வயிற்றுப் பிரச்சினைகளை உண்டாக்கும்.

✣ முகத்தின் தோற்றத்துக்குச் சிறந்த பொலிவைத் தருவது இமையே. தினமும் இமைகளுக்குத் தேங்காய் எண்ணெய் இரண்டு துளிகள் இரவில் தேய்த்துவந்தால், இமை முடி கருகருவென வளர்ந்து, நல்ல தோற்றத்தையும், விழிகளுக்கும், முகத்துக்கும் அழகைக்கொடுக்கும்.

✣ கூந்தலின் நுனிப்பகுதியை அப்படியே விட்டுவிடாமல் எப்போதும் கட்டி வைத்திருப்பதால், நுனி வெடித்து, பிளவு படாமல் இருக்கும். அமாவாசைக்கு 3 நாட்களுக்குப் பின் கூந்தலின் நுனி முடியை சிறிது வெட்டிவிட்டால், கூந்தலின் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கும். ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இவ்வாறு செய்யலாம்.

சவற்காரம் பயன்படுத்துவதற்குப் பதிலாக பச்சைப் பயிற்றம் மாவை நன்கு முகத்தில் தேய்த்து, முகம் கழுவிவர முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறைந்து, முகம் பளபளப்பாகும்.

✣ முகத்தில் தேமல் இருந்தால், பார்ப்பதற்கு அழகில்லாம் இருக்கும்.. இதற்கு துளசி இலை பத்து எடுத்துக் கசக்கி, அதன் சாற்றை பிழிந்து, 3 துளி எலுமிச்சைச் சாறுடன் கலந்து தேமல் உள்ள இடத்தில் தடவிவர விரைவிலேயே தேமல் மறையும்.


✣ இரவில் தேங்காய் எண்ணையை முகத்தில் தடவி, காலையில் பயிற்றம்மாவினால் முகங்கழுவிவர, முகம் வசிகரமாகும். தேனுடன் எலுமிச்சம்பழச்சாறு கலந்து முகத்தில் தடவி, 15 நிமிடங்கள் கழித்துக் கழுவிவர எண்ணை வடியும் முக அமைப்புடையவர்களுக்கு முகம் பளபளப்பாகும்.

✣ அவரை இலைச்சாற்றைக் முகத்தில் தடவி வந்தால், முகத்திலுள்ள சிறு தழும்புகூட மாயமாய் மறைந்துபோகும்.

✣ சில பெண்களுக்கு அதிகளவில் முடி உதிருதல் அதிகமாக இருக்கும். நெல்லிக் கனிகளை அரைத்து, அதில் சிறிதளவு எலுமிச்சைச்சாற்றையும் கலந்து, தலையில் நன்றாக ஊறவைத்துப் பின் கழுவி வந்தால், முடி உதிருதல் நின்றுவிடும்.

✣ வெந்தயத்தை ஊறவைத்து, அரைத்து, முகப்பரு மேல் தடவி வந்தால், பருக்கள் காணாமல் போய்விடும்.

## சிநேகிதிக்கு ஒரு மடல்



அன்புள்ள சிநேகிதியே!

நான் நலம், உனது மடல் கண்டு, உன் நிலைமை அறிந்தேன்.

உனது மடலை வாசித்ததும், அழுவதா அல்லது சிரிப்பதா என்பது எனக்குத் தோன்றவில்லை. வரட்டுக் கௌரவங்களுடன், வாழும் கிணற்றுத் தவளையாக இன்னும் நீ இருப்பதையிட்டு மனம் வருந்துகின்றேன்.

எனது கல்லூரி நண்பர்களுடன் இணைந்து பிடித்த புகைப்படம், ஏதோ கலாசார மீறல் என எழுதியிருந்தாய். நண்பியே – நான் இன்று இருப்பது இலங்கையல்ல. இலண்டன் மாநகரம். பத்து வருடங்களாயும் உன்னைப்போன்று, கலாசாரம் கலாசாரமென இத்தகைய கலாசாரத்தோடு என்னை இணைவுபடுத்தியிருக்காது விட்டால், நானும் உன்னைப் போல் ஒரு கிணற்றுத் தவளையாக இன்றும் இருந்திருப்பேன். எமது நடவடிக்கைகள் கலாசார சீர்கேடு எனக் கண்ணீர்விட்டு எழுதியிருந்தாய். நாம் கலாசாரத்தையே கட்டிப்பிடித்துக்கொண்டு இருந்தால், நாகரிகமற்ற தற்காலத்து வேடர்களாகவே இன்னும் இருந்திருப்பேன்.

காலத்தின் தேவை கருதி கலாசாரத்தையும் மாற்றவேண்டும். ஏதோ தமிழர் தம் பண்பாடு என இடித்துரைத்து எழுதியுள்ளாய். காலத்தின் நலன்கருதி பயன்படுத்தப்படுவதே பண்பாடு. இது இன்னுமா உனக்குப் புரியவில்லை.

ஐரோப்பியக் கலாசாரத்திலே ஆண் நண்பர்கள் இல்லாவிட்டால், ஒரு இளம் பெண்ணுக்கு அவமானம். கல்லூரிக்கும், கடைத்தெருவுக்கும் செல்வதற்கு ஒரு ஆண் நண்பன் இங்கு அவசியம். அவன் காதலனாகவோ அல்லது கணவனாகவோ இருக்கவேண்டும் என்ற நியதி இல்லை. விரும்பினால், எதிர்காலம் பற்றிச் சிந்திக்கலாம். நானும், நீயும் பிறந்த தமிழர் தம் கலாசாரத்திலே ஆண் நண்பர்களின் தொடர்பு அனுமதிக்கப்படாததொன்று. ஆனால், அதுதான் இங்கு அந்தஸ்து. இந்தியாவிலோ, இலங்கையிலோ விதவைக்கு எந்தளவு சமூக அந்தஸ்து இருக்கின்றதோ, அதே நிலையில்தான், ஆண் நண்பர் இல்லாத இளம் பெண்களின் நிலையும்.

பாசிநிறைந்த பழைய பாரம்பரிய சேற்றுக் கலாசாரத்தில் வளர்ந்து வந்த உனக்கு– எமது கலாசாரப் போக்கு ஏற்றுக்கொள்ளமுடியாததாகத்தான் இருக்கும். நாம் ஒன்றாகப் படித்த காலத்தில் பாரதி கண்ட புதுமைப் பெண்பற்றி எல்லாம் நீதானே அதிகம் பேசுவாய். அந்தப் புதுமைப் பெண்ணிலும், புதுமையானவர்களாகத்தான் நாம் இங்கு வாழ்கின்றோம். நாம் இங்கு ஆண்களோடு சமமாக அனைத்து விடயங்களிலும் பங்குகொள்கின்றோம். பால் வேறுபாடு என்ற பழமைக் கோட்பாடு நம்மிடம் இல்லை. ஆணுக்குப் பெண் நிகர் என்ற பாரதியின் கோட்பாடு இங்குதான் முதன்மை பெறுகின்றது. நிமிர்ந்த நடையுடன், நேர் கொண்ட பார்வையுடன் நாம் இங்கு வாழ்கின்றோம்.

எனவே எனக்காகக் கண்ணீர் விடாமல் உனக்காக அழு. உன்னைச் சுற்றி ஒரு வட்டத்தை வரைந்துவிட்டு அதுதான் கலாசாரம், அதனை மீறக்கூடாது என எண்ணும் உனது அறியாமைக்காக அழு. உன்னால் யதார்த்தத்துக்கு ஏற்றவாறு சிந்திக்க முடியாது என்பதே யதார்த்தம். நான் அதிகம் எழுதிவிட்டேன் போலுள்ளது, அடுத்த மடலில் உன்னைச் சந்திக்கும்வரை.

*அன்புள்ள சிநேகிதி*

*– லெஸ்லினா.*

# பிஞ்சுமுகத்தின் தேடல்

நேற்றைக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். இன்றைக்கு எனது மனம் அமைதியாக இருக்கிறது. நாளைக்கு நான் என்ன செய்ய வேணும் எண்டது எனக்குத் தெளிவாகத் தெரியுது. இதுக்கு ஒரு காரணம் இருக்கு. எனக்குப் பத்து வயது. ஆனால், என்ரை தோற்றத்தைப் பார்த்தால் ஒரு ஐந்து வயதுகூடச் சொல்லலாம். எனக்கு கை, கால் எல்லாமே நீளம். வீட்டில் ஏதாவது பொருளை எட்டி எடுக்கவேணுமெண்டால் என்ரை உதவிதான் எல்லாருக்கும் தேவை. 'நெட்டைப்பனை' எண்டு



அக்கா எனக்குப்பட்டம் வைச்சிருக்கிறாள். நானும் அவளுக்கு 'கட்டைப்புட்டு' எண்டு ஒருபெயர் மனதுக்கை வைச்சிருக்கிறன். ஆனால், வெளியிலை சொல்லப்பயம்! அக்காவுக்கு தேவி எண்டு பெயர். A/L படிக்கிறாள். நல்ல கெட்டிக்காரி. பள்ளிக்கூடம் விட்டு வந்தால் வீட்டிலை நிக்கமாட்டாள். ரியூசன் எண்டு திரிவாள். அப்பா அவளைச் சைக்கிளிலைதான் முதலில் கொண்டு போய் விடுகிறவர். அது அவளுக்கு விருப்பமில்லை. அப்பா அவளுக்கு ஒரு சின்னச் சைக்கிள் வாங்கிக் குடுத்திருக்கிறார். விடியற்காலை 6 மணிக்கு ரியூசன் வகுப்புக்குப் போவாள். அவளின்ரை வகுப்புச் சிநேகிதிமார் கேற்றுக்கை வந்து பெல்லை அடிப்பினம். 'தேவி கெதியா வாருமப்பா' எண்ட குரல் வைப்பினம். எனக்கு அவையளைப் பார்க்க 'மார்கழிப் பண்டாரங்கள்' போல இருக்கும். எங்கட அம்மன கோயிலிலை பிரசங்கம் செய்யிறவர் சொன்னது நினைவிலை இருக்கு. வீடுவீடாகப் போய்த் தோழிமாரை எழுப்பும் வழக்கம் முந்தி இருந்ததாம். எல்லோரும் தெருவிலை சேர்ந்து பாடிக்கொண்டுபோய் குளத்திலை நீராடிக் கோயிலுக்குப் போய் கும்பிடுவார்களாம். ஆனால், இந்தக் காலத்திலை ரியூசனுக்குச் சைக்கிளிலை றோட்டை அடைச்சுக் கொண்டு போறது - 'நவீன திருவெம்பாவை' எண்டு சொன்னார். அதைக் கேட்டுவந்து, அக்கா வீட்டைச் சொன்னன். அவள் சொன்னாள் 'உந்தவெள்ளை வேட்டிக்காறருக்கு வேறை வேலை இல்லையாக்கும்'. அதைக் கேட்டு எனக்குக் கோபம் வந்தது. பெரியவர்களைக் கிண்டல் செய்யிறாளே எண்டு நினைச்சன். கடவுள் எப்படியும் காட்வார் எண்டு எனக்கும் தெரியும்.

எனக்குப் படிப்பு எண்டால் விருப்பமில்லை. சின்னவயதிலை அடிக்கடி வருத்தம் வந்ததாலை, ஒழுங்காகப் படிக்கமுடியவில்லை. அம்மாவுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. ஆனால், வீட்டு வேலை எல்லாம் ஒழுங்கா, நீற்றாச் செய்வாள். எங்கட குசினியை நீங்கள் வந்து ஒருக்காபாக்கவேணும். அதது அந்தந்த இடத்திலை இருக்கும். அக்கா அடிக்கடி சொலலுவாள் - அம்மா பொருட்காட்சி வைச்சிருக்கிறா'. எனக்கு அம்மாவின்ரை ஒழுங்கு நல்லாப்பிடிக்கும். அவள் முற்றத்தைக் கூட்டும்போது பார்த்துக்கொண்டே இருப்பேன். பழைய காலத்து குனிஞ்சு கூட்டுற விளக்குமாத்தை அவள் தென்னோலை போலப் 'பற்றன்' போட்டுக் கூட்டுவாள். நானும் அம்மாவைப்போல கூட்டப்பழகிவிட்டன். சமையல் பாத்திரங்களையெல்லாம் பளிச்செண்டு மினுக்கிக் கழுவி ஒழுங்காக வைப்பாள்.

அம்மா புத்தகம் படிக்கத் தெரியாதவள் எண்டாலும், செய்யும் வேலையிலை ஒரு நேர்த்தியைப் படிச்சு வைத்திருக்கிறாள்.

ஒருநாள் அம்மாவைக் கேட்டன் - 'அம்மா! உங்களுக்கு யார் இந்த வேலையைப் பழக்கி விட்டது. அவள் சொன்ன பதில் இதுதான் - 'எலலாம் கண் கண்டால் கைசெய்யும்' என்று என்ரை அம்மா அடிக்கடி சொல்லுவா. அதுதான் நான் படிச்ச படிப்பு. அம்மா சொன்னது என்ரை மனதிலை பசுமையாக இப்பவும் இருக்கு. ஆனால்... அம்மா! அவளை நான்...

அண்டைக்கு ஒருநாள் நடுச்சாமம்... எங்கடை ஆடு கத்திச்சு. நான் கண்ணை முழிச்சன். பக்கத்திலை படுத்திருந்த அம்மா எழும்பி, தணிச்சு வைச்சிருந்த அரிக்கன் லாம்பை' எடுத்துக்கொண்டு போனன். நானும் பின்னாலை போனன். ஆட்டுக்கொட்டிலுக்கை எங்கட பெரிய மறி ஆடு கீழே படுத்துக் கொண்டு கத்திக் கொண்டிருந்தது. அப்பா வீட்டிலை இல்லை. வெளிநாட்டிலை இருக்கிற எங்கட சித்தப்பா வாறதெண்டு அவரைக் கூட்டப்போயிட்டார். இரண்டு நாளைக்கு முன்னர் பஸ்சிலை கொழும்புக்குப் போனார். எனக்கும் கூடப்போக விருப்பம்தான். ஆனால், அப்பா போய்வரவே காசு மட்டு எண்டு கதைச்சது என்ரை காதிலை விழுந்தது. அதோடை என்ரை ஆசையை அடக்கிப்போட்டன். ஆனால், அக்கா ரியூசன் காசு 300 ரூபா வேணுமெண்டு அடம்பிடிக்க, அப்பா காசைக் கொடுத்துவிட்டார். அம்மா படிக்காவிட்டாலும் நல்ல மூளைசாலி. தன்ரை காதுத்தோடு இரண்டையும் கழற்றிக்கொண்டு போய் அடைவு வைச்சு காசு 500 ரூபா கொண்டு வந்து அப்பாவிட்டைக் குடுத்தாள். அப்பா அம்மாவை கடவுளைப் பாக்கிறதைப்போலப் பார்த்தார். எனக்கு அம்மா அப்ப ஒரு பெரிய பாடத்தைப் படிப்பிச்சுவிட்டாள். 'ஆபத்துக்கு உதவி செயய வேணும். அதுதான் உண்மையான அன்பு பெரியவரின்ரை பிரசங்கத்தை நான் இப்போது நல்லா விளங்கிக்கொண்டன். ஆடு பெரிதாக அம்மா.. எண்டு கத்தவே என்ரை நினைவு கலைஞ்சு போச்சு... இரண்டு குட்டிகள்! அம்மா சளிசுற்றிய குட்டிகளைப் பக்குவமாகச் சளியை வழிச்சுப் போட்டுச் சாக்கிலை கிடத்தினாள். தாய் ஆடு குட்டிகளை நக்கியது. அம்மா... ஏதோ முணுமுணுத்தாள். "இளங்கொடியை போடப்பண்ணடி தாயே!" எனக்கு மெல்லக் கேட்டது. அம்மாவின்ரை வழிபாடு உடனை பலன் தந்தது. இளங்கொடியும் வந்துவிட்டது. அம்மா அதை உடனே எடுத்து ஆட்டுக் கொட்டில் வளையிலை கிடந்த கிழிந்த சாக்கிலை வைச்சுக் கட்டினாள். நான் அவள் முகத்தைப் பார்த்தேன். அது ஒரு பெரிய டாக்குத்ரை முகம்போல பொலிவாக இருந்தது. அம்மா அரிக்கன் லாம்பை விட்டிட்டு எழம்பிப் போனாள். நான் எழும்பி நடக்க முயற்சி செய்யும் ஆட்டுக்குட்டிகளை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தன். குட்டி இரண்டும் எழும்பி மெல்ல நடந்து தாயாட்டில் பால் குடிக்க முயற்சி செய்தினம். அவையின்ரை முயற்சியைப் பார்க்க எனக்கு வியப்பாக இருந்தது. ஒருதரும் சொல்லிக்குடுக்காமல் தங்கடை தேவையை நிறைவேற்றும் இயல்பான அறிவை நான் உணர்ந்துகொண்டன்.


போன அம்மாவின்ரை ஞாபகம் இப்பதான் வந்தது. வெளியாலை ஒரே இருட்டு. பயமாகவும் இருந்தது அரிக்கன் லாம்பை எடுத்துக் கொண்டு கொட்டிலை விட்டு வெளியிலை வந்தன். வீட்டுக்கும் ஆட்டுக்கொட்டிலுக்கும் இடையிலை ஒரு 150 அடி தூரம் வரும். கொஞ்சதூரம் நடந்து வந்தேன். பயத்திலை நிலத்தைப் பார்த்தன். அம்மாவின்ரை சிவப்புச் சேலை... கால்தெரிந்தது. அம்மா விழுந்து கிடந்தாள். மூச்சுப் பேச்சில்லை. அம்மா! அம்மா! நான் கத்திக் கூப்பிட்டன். ஒரு பதிலும் இல்லை. விளக்கைப் பிடிச்சு முகத்தைப் பார்த்தன். வாறெல்லாம் நுரை... முகம் நீலமாக இருந்தது. நான் அக்காவைக் கூப்பிட்டேன். அவள் எழும்பி ஓடிவந்தாள். அம்மா! அம்மா!.. எங்கட குரல் அயலட்டையை எழுப்ப, எல்லோரும் விளக் கோடு வந்தனர். அம்மாவின்ரை கையைப் பிடிச்சுப்போட்டு ஒருதர் சொன்னார். "விஷம் தீண்டிப் போட்டுது! உயிர் போயிட்டுது!... நான் விறைத்துப்போனன். எல்லாம் திடீரென்று நடந்து முடிந்து விட்டது. இப்ப அம்மா நடுவீட்டுக்கைக் கிடக்கிறாள். காதிலை தோடில்லை... அப்பா வரும்வரை எல்லோரும் காத்திருக்கினம். எனக்கு வாய்விட்டு அழவேணும் போலை இருந்தது.

ஆட்டுக் கொட்டிலுக்கை போனன். இரண்டு குட்டிகளும் என்ரை காலுக்கை வந்தன. அதுகளை அணைச்சுப்பிடிச்சன். நேற்றிரவு அம்மாவின் அணைத்த கைகள் நினைவில்வர, கண்ணில் நீர் பெருகிற்று. வாய்விட்டும் எதுவும் பேசமுடியவில்லை.

**மனோன்மணி சண்முகதாஸ்.**

"உலகத்துக்குள் நாடு" என்ற நிலைமை மாறி "நாட்டுக்குள் உலகம்" என்ற தன்மை வந்துவிட்டது. இதற்கு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மிகப் பெரும்பங்காற்றியுள்ளன. இதன் மூலமாக பல பண்பாட்டுக் கலப்புக்களும் நிகழ்ந்துள்ளன. இந்நிலையில் ஒவ்வொருவரினதும் பண்பாடுகளை சீர்தூக்கி பார்த்து நல்லவற்றை ஏற்றுக்கொள்ளவும் முடிகிறது.

இங்கு பண்பாடு என்ற சொற்பதத்தினை எடுத்து நோக்கின் அது பண்படுத்தல் என்ற சொல்லின் அடிப்படையாகப் பிறந்துள்ளது. அதாவது ஒரு தரிசு நிலத்தினை பண்படுத்தி நீர் ஊற்றி பயிர்ச்செய்கைக்கேற்ற நிலமாக மாற்றுவதைப்போல மனித மனத்தினைப் பண்படுத்தி நல்ல எண்ணங்களை விதைப்பதே பண்பாடு.



அந்த வகையில் இங்கு நாம் தமிழ்ப்பண்பாட்டில் விதவைகளின் நிலைபற்றி நோக்குவோம். முதலில் விதைவைகளின் வெளித்தோற்றத்தினை நோக்கின், அவர்கள் பொட்டுவைக்காது மலர்சூடாது, வண்ண ஆடைகளை அணியாது, பிற ஆடவர்களுக்கு தம் மீது எந்தவித இம்சைகளும் தோன்றாத வகையில் இருக்க வேண்டும். இது எமது தமிழ்ப் பண்பாட்டில் எழுதாத சட்டம்.

முன்னைய காலங்களில் இதனூடாக சமூக ஒழுங்குகள் பேணப்படும் என்று மக்கள் நம்பினார்கள், செயற்பட்டார்கள். ஒரு வகையில் அது அந்தக்காலத்துக்கு பொருத்தமான ஒன்றாக அமைந்திருந்தது.

ஆனால், இன்றைய காலங்கள் அப்படியானவையல்ல. இன்று உலகில் அதிகரித்து வருகின்ற போர்களாலும், கிளர்ச்சிகளாலும், இளவயது மரணங்கள், முன்னைய காலங்களைக் காட்டிலும், அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த நிலையில் இளம் விதவைகளின் தொகையும் அதிகரித்துள்ளது. அத்தோடு, முன்னைய காலங்களைப்போல் விதவைகளாய் மூலைக்குள் முடங்கிக்கிடக்காது, பலர்

# பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல

வேலைத் தளங்களுக்குச் சென்று தமக்கும் சார்ந்தவர்களுக்குமான பொருளாதார வளத்தினை தேடவேண்டியவர்களாய் இவர்கள் இருக்கின்றனர்.

இந்த நிலையில் ஒரு தொழிற்சாலையில் வேலைபார்க்கும் பெண் விதவைக் கோலத்தில் வலம்வந்தால் அவளை பலரும் அபசகுனம் பிடித்தவளாக கருதமுற்படுவர். அவளின் கோலத்தால் பல உயர்பதவிகளும் அவள் கையை விட்டுப்போகும்நிலை உள்ளது. இது ஒரு தொழில்சார் பிரச்சனை.

இதனைவிடுத்து அவளின் மனவுணர்வுகளை நோக்கின் பெண்கள் தம்மை அழகுபடுத்துவதில் ஆனந்தம் அடைபவர்கள். இதனை பெண்களின் ஒரு பண்பு என்று கூடச் சொல்லலாம் இத்தகைய ஒரு நிலையில், ஒரு இளம் விதவைப் பெண் தன்னை அழகுபடுத்தின், இந்த சமூகம் பண்பாடு என்ற பெயரால் அவளை ஒரு குணக்கேடான பெண்ணாகப்பார்க்கிறது.

ஒரு குடும்பத்தின் கணவன் என்பவன் எவ்வளவு பெரிய இடத்தில் இருக்கின்றான். அவனுடைய இழப்பு அந்தக்குடும்பத்துக்கு எவ்வளவு பெரிய இழப்பு. இவ்வாறு உடலாலும் உள்ளத்தாலும் துன்புற்றிருப்பவர்களின் உள்ளத்திளை நோகடிப்பது, பண்பாடு மிக்க செயலாகுமா? இத்தகைய சந்தர்ப்பங்களில் மேலைநாட்டுப் பண்புகளை கைக்கொள்வதில் தவறேதும் இல்லை.

மேலை நாட்டு பண்பாடு என்றதும், இன்று திருமணம், நாளை விவாகரத்து, என்று இருக்கின்ற அவர்களின் தான்தோன்றித்தனமான சுதந்திரத்தைக் குறிப்பிடவில்லை.

ஒரு பெண் விதவையாகும்போது, அவளது உணர்வுநிலைகளும், ஒடுங்கிப்போகும் என்றில்லை. அவர்கள் தம்மைத்தாமே ஒடுங்கிக்கொள்வது வேறு, அவர்களை ஒடுக்கநினைப்பது வேறு. இங்கு ஒடுக்கநினைப்பது தவறு. இந்த நிலையில் அவள் மறுமணம் புரிவதோ, தன்னை அழகுபடுத்துவதோ அவளின் சுதந்திரம்.

எமது தமிழ்க்கலாசாரத்தில் பெண்பிள்ளைகளுக்கு சிறுவயது முதல்கொண்டு, பொட்டுவைத்து. பூவைத்து அழகுபார்க்கின்றோம். திருமணத்தின் பின்பு, அவளுக்கு தாலியும், குங்குமமும் கிடைக்கின்றன. எனவே கணவன் இறந்ததும்.அவன் மூலமாக கிடைக்கப்பெற்ற மாற்றங்களான தாலியையும் குங்குமத்தையும் வேண்டுமானால் நீக்கிவிடலாம். அதனைவிடுத்து, அவளை மூளியாக்கிப்பார்ப்பதனால் யாருக்கு என்ன பலன்?

இந்த விடயத்தில் நமது நாட்டுக்கு சிறிதும் பொருத்தமற்ற மேலைநாட்டவரின் நவநாகரீக ஆடைகளில் கவனம் செலுத்தும் நமது சமூகம் அவர்களிடம் உள்ள சில நல்ல பண்புகளையும் கைக்கொண்டால், ஆரோக்கியமான ஒரு சமூதாயத்தை கட்டியெழுப்பலாம்..

பழைய கழிதலும், புதியன புகுதலும் வழுவல்ல காலவகையினதே.

**- ரஜிதா -**

# இந்த வார பலன்கள்

## 23.04.2004 - 29.04.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| புத | சூ ராகு | சந் செவ்.சுக் | சனி |
| யுரே | 24 கா. 7.33 மிது.சந்<br>26 இ 10.07 கட.சந் | | |
| நெப் | 27 இ.12.56 மிது.செவ்<br>29 கா 6.34 சிங்.சந் | | குரு |
| | | கேது | |

### மேடம

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)



மேடராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் தொழில்முயற்சி சிறப்பாக இருக்கும். முன்பிருந்த சிக்கல்கள் நீங்கி நன்நிலை தோன்றும். குடும்பநிலை மகிழ்ச்சியாக இருக்கும். குடும்ப அங்கத்தவர்கள் புரிந்துணர்வுடன் செயற்படுவார்கள். சிலருக்குத் திடீர் இலாபம் கிடைக்கும். திருமண நிகழ்வுகள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு நன்மையான காலமாக அமையும். சிலருக்கு வசதியான இடமாற்றங்கள் கிட்டும். புதிதாக உத்தியோகத்தை நாடுவோர் நன்மைபெறுவர். வர்த்தகர்கள், விவசாயிகள் முதலீடுகள் செய்வதில் அவதானம் தேவை. வியாபாரத்தில் பணம்சேரும். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் நீங்கும்.

### இடபம்

(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)



இடபராசிக்காருக்கு இவ்வாரம் தொழில்நிலைக் கஷ்டங்கள் தீர்ந்து முன்னேற்றம் கிடைக்கும். எனினும் மறைமுக எதிரிகளைப்பற்றி அவதானமாக இருக்கவும். ஏதாவது சிக்கலில் மாட்டிக்கொள்ள நேரும். குடும்ப நிலை ஓரளவு நன்றாக இருக்கும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடக்க இடமுண்டு. திருமணப் பேச்சுக்கள் மேலும் தாமதமடையும். தொழில் புரிபவர்களுக்குப் பல நன்மைகள் கிட்டும். மேலதிகாரிகளால் பாராட்டப்படுவர். விவசாயிகள் தமது பொருட்களைச் சந்தைப்படுத்தி நல்ல இலாபம் பெறுவர். வியாபாரிகளுக்கு முதலீடுகள் விற்பனையாகி நிறைந்த பணம் சேரும். மாணவர்களது கல்விநிலை உயர்ச்சி அடையும். உயர்கல்விக்கு வரவேற்புக் கிட்டும்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுன ராசியில் பிறந்த அன்பர்கள் இவ்வாரம் மிகுந்த அவதானத்துடன் நடந்துகொள்வது நன்று. தம்மையறியாமல் எதிர்ப்புகள் வந்துசேரும். பிள்ளைகளால் செலவுகள் அதிகரிக்கும். செய்கின்ற தொழிலுக்குகேற்ப ஊதியம் கிடையாது. கடன தொல்லைகள் வந்துசேரும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நன்மை தரும். திருமணப்பேச்சுக்கள் இழுபறியிலேயே இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு பதவிகளில் மாற்றங்கள் ஏற்படலாம். வேலைப்பழு அதிகமாக இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாகவே இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குன்றிக்காணப்படுவர். சுகக்குறைவு காட்டும்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் பல நற்பலன்கள் காத்திருக்கின்றன. தொழிற்துறையில் இருந்த சிக்கல்கள், கஷ்டங்கள் மறையும். உற்சாகத்துடன் தொழில் செய்யமுடியும். பொருளாதாரநிலை விருத்தியடையும். குடும்பத்தில் மகிழ்ச்சி, கலகலப்பு காணப்படும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்க இடமுண்டு. இனபந்துக்கள், நண்பர்களின் வரவுகள் அதிகரிக்கும். அடிக்கடி பிரயாணமும் மேற்கொள்ளவேண்டியிருக்கும். திருமணப்பேச்சுக்கள நல்லமுடிவுக்குவரும். உத்தியோகத்தர்களுக்கு பாராட்டுக்கள் கிட்டும். சிலருக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். வர்த்தகர்களுக்கும், விவசாயிகளுக்கும் வியாபாரம் 'ஓகோ' என்று நடந்து பணம்சேரும். மாணவர்களுக்கு உயர்ச்சி உண்டு. சிலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கலாம்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு தொழில்நிலை வாய்ப்பாக இல்லை. வேலைப்பழுவும் பிரயாசையும் கூடுதலாக இருக்கும். எதிர்பார்த்த பணவருவாய் கிடைக்காது. குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும். இடையிடையே தேகசுகக் குறைவுகளும், மனக்கசப்புகளும் தோன்றும். மனத்தில் நிம்மதிக்குறைவு இருந்துகொண்டிருக்கும். திருமணப்பேச்சுக்கள் கைகூடுவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தகர்களுக்கு வேலைப்பழு அதிகமாகும். உயரதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாகவேண்டியிருக்கும். விவசாயிகள், வர்த்தகர்களுக்கு நஷ்டமே காட்டும். கொடுக்கல் வாங்கலில் அவதானம் தேவை. மாணவர்கள் கல்வியில் உயர்நிலை அடைவார்கள். வேலை வாய்ப்புகளுக்கும் இடமுண்டு.

### கன்னி

(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)



கன்னிராசியில் பிறந்த அன்பர்களுக்குத் தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். முன்பிருந்த தடங்கல்கள் யாவும் நீங்கும். பலவிதமான நன்மை ஏற்பட இடமுண்டு. பொருளாதாரநிலை சிறப்படையும். எனினும், பண விடயங்களில் அவதானத்தை மேற்கொள்வது நன்று. குடும்பநிலை மகிழ்ச்சியாக இருக்கும். சுபசம்பவங்கள் நடக்கும். தேகசுகம் பாதிப்பில்லை. வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வோருக்கு நன்மை உண்டு. உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு வேலைப்பழு அதிகமாக இருந்தாலும், முன்னேற்றமும் செல்வாக்கும் கிட்டும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபத்தையே பெறுவர். கொடுக்கல் வாங்கல்களில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி அடைவார்கள்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் ஜனனமானவர்களுக்குப் குருபகவான் லாபஸ்தானத்திலிருந்து பல நன்மைகளைத் தந்துகொண்டிருப்பார். தொழில்நிலையில் சில மாற்றங்கள் ஏற்படக்கூடும். பண வருவாயில் சில தடங்கல்கள் காட்டினாலும், வருவாய் பாதிப்படையாது. குடும்பத்தில் மகிழ்ச்சியானநிலை தொடரும். உறவினர்கள், நண்பர்களால் நன்மைகள் நடந்துகொண்டேயிருக்கும். திருமணப் பேச்சுக்கள் விரைவில் அனுகூலத்தைத் தரும். உத்தியோகத்துறையில் உள்ளோருக்கு முன்பிருந்த தடங்கல்கள் நீங்கும். உயர்வுகள் உண்டு. விவசாயிகள், வியாபாரிகள் குறிப்பிடத்தக்க இலாபம் பெறுவர். மாணவர்கள் பல சித்திகளைப் பெறுவர்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக இராசியினருக்கு தொழில்முறையில் பிரயாசை கூடுதலாக இருக்கும். எதிர்பார்த்த வருவாய் கிடைப்பது கடினம். இரகசியப் பகைவர்களைப்பற்றி அவதானமாக நடத்தல் நன்று. குடும்பநிலையில் சில மனக்கசப்புகள் தோன்றலாம். தேகசுகத்தைப்பற்றி கவனம் எடுக்கவும். குடும்பப்பெண்கள் எல்லா விடயங்களிலும் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் நன்று. திருமணப் பேச்சுக்கள் மேலும் இழுபறியை ஏற்படுத்தும். உத்தியோகப் பணிபுரிவோருக்கு மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். அவற்றைச் சமாளித்துப் பணியாற்ற வேண்டியிருக்கும். சக தொழிலாளர்களின் உதவி கிடையாது. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த லாபத்தையே பெறுவர். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. மாணவர்களுக்குச் சில தடைகள் ஏற்பட்டாலும் எதிர்காலத் திட்டங்கள் நன்மையளிக்கும்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுராசியில் பிறந்தவர்களுக்கு தொழில்முறையில் மாற்றங்கள் ஏற்படும். குடும்பநிலை முன்பிலும் பார்க்க முன்னேற்றமாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை வலுக்கும். பணக் கஷ்டங்கள் தீர்ந்து முன்னேற்றப் பாதையில் செல்லும். இனபந்துக்களுடன் இருந்த மனஸ்தாபங்கள் நீங்கி ஒற்றுமை வலுக்கும். லக்கினத்தைக் குரு நோக்குவதால் பல முன்னேற்றப் பாதைகள் தென்படும். திருமணம் சம்பந்தமான பேச்சுக்கள் வெற்றியளிக்கும். தேகசுகம், குடும்பசுகம் திருப்தியாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்காலம் வெற்றியளிக்கும். விரும்பிய தொழில் மாற்றங்கள் கிடைக்கலாம். விவசாயிகள் தமது பொருட்களைச் சந்தைப்படுத்தி லாபம் பெறுவர். வியாபாரிகளுக்கும், தொழில் சிறப்பாக நடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி ஏற்படும்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியினருக்கு அட்டமத்து வியாழன் நற்பலன்களைக் குறைக்கும். குடும்பத்தில் கருத்து வேற்றுமை அதிகரிக்கும். இதனால் நிம்மதிக் குறைவும் மனவேதனைகளும் ஏற்படும். தொழில முயற்சிகளுக்கு ஏற்ற வருவாய் கிடையாது. அன்றாடச் செலவுகள் வரவுக்கு மிஞ்சிக் காணப்படும். இதனால் கடன் தொல்லைகள் ஏற்படும். தேகசுகம் இடையிடையே பாதிப்படையும். பெண்களுக்கு விவாக விஷயத்தில் முன்னேற்றமில்லை. குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். தொழில் புரிவோர் தமது குடும்பப் பொறுப்புக்களைச் சமாளிப்பதில் கஷ்டமடைவர். உயரதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக வேண்டியிருக்கும். வியாபார நடவடிக்கைகளில் சிக்கல்கள் தோன்றும். வங்கி உதவிகள் கிடையாது. ஊழியர்களின் பிணக்குகள் தோன்றும். மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவு.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*



கும்பராசியில் பிறந்தவர்களுக்கு உயர்ச்சி ஏற்படலாகும். தொழில்மூலம் நல்ல வருவாய் கிடைக்கும். குடும்பத்தில் சந்தோச நிகழ்வுகள் நடக்கும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். நண்பர்களாலும், பிள்ளைகளாலும் நன்மைகள் கிட்டும். வெளிநாட்டிலிருந்து சுபசெய்திகள் கிட்டும். திருமணப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். வசதியான இடமாற்றங்கள் ஏற்படலாம். வர்த்தகர்களுக்கு விற்பனை மூலம் கூடிய இலாபம் கிடைக்கும். வங்கி உதவிகளும் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் இருந்த குறைபாடுகள் நீங்கும்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியில் பிறந்தவர்களுக்கு தொழிலில் பிரயாசை கூடுதலாக இருக்கும். மன உற்சாகம் குறைந்து காணப்படுவர். பணவருவாயில் தடைகள் காட்டும். குடும்பத்தில் திட்டமிட்ட கருமங்கள் சிரமத்துடனேயே நிறைவுபெறும். தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படலாம். வைத்தியச்செலவுகளும் தலைதூக்கும். திருமணப் பேச்சுக்கள் தடைப்படும். குடும்பப்பெண்கள் அவதானத்துடனும், சிக்கனத்துடனும் செயற்படுதல் வேண்டும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த நன்மைகள் வந்தடையும். அதிகாரிகளின் உதவியும் உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாகவே இருக்கும். வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தி முன்னேறவும். மாணவர்களுக்கு கல்வி சிறப்படையும். உயர்கல்வி கற்க வாய்ப்புண்டு. ✦

---

**மூலிகை அறிவியல்** — **ஜெயா**

# மூலிகைகளும் அவற்றின் நோயெதிர்ப்பு சக்தியும்

### *பொன்னாங்காணி*

நூறுகிராம் பொன்னாங்காணிக் கீரையில் 510 மில்லிகிராம் சுண்ணாம்புச்சத்தும், 60 மில்லி கிராம் மணிச்சத்தும், 16.7 மில்லி கிராம் இரும்புச்சத்தும் உள்ளன. இந்தக் கீரையை உண்பதனால் கண் சம்பந்தமான நோய்கள், வாய்ப்புண், வாய்நாற்றம் முதலியன குணமாகின்றன.

இந்தக் கீரையில் பூடு சேர்த்து நெய்விட்டு வதக்கி சோற்றுடன் 45 நாட்கள் உண்டுவந்தால் மூல நோய்கள் குணமாகும். இக்கீரையிலிருந்து தயாரிக்கப்படும் தைலத்தை தேய்த்து தலைமுழுகி வந்தால் கண் நோய்களும், வெப்ப நோய்களும் நீங்கும். பூச்சாடிகள் மற்றும் வீட்டுத்தோட்டத்தில் இலகுவாகப் பயிரிடக்கூடிய பயிராகும். இதன்மூலம் சுயதேவையும், சிறுபொருளாதார வரவையும் பெற்றுக் கொள்ள இல்லத்தரசிகளுக்கு நல்ல வாய்ப்பு.

### *வில்வை*

தொழுநோய், மகாரோகம், மேக நோய், கசநோய், கை, கால் பிடிப்பு, கிரந்தி இவைகளை நீங்கி மூளைக்கும் பலத்தைத் தந்து, புத்திக் கூர்மையை உண்டுபண்ணும். கண்களில் வலி, சொறி, சிவப்பு இவற்றுக்கு வில்வ இலையை வதக்கி கண் இமைகளில் ஒத்தடம் கொடுக்கலாம்.

வில்வை சரீரத்திலுள்ள சகல வியாதிகளையும் போக்கி, இரத்த விருத்தியையும் உண்டுபண்ணும். ஒரு ரம்ளர் நீரில் இரவு ஒரு கைப்பிடியளவு வில்வ இலைகளைப் போட்டு, காலையில் தொடர்ந்து 24 நாட்கள் பருகிவந்தால் திக்குவாய் நீங்கும். 100 வயதுக்கு மேற்பட்ட வில்வமர இலைகளை தினமும் சாப்பிட்டு வந்தால் புற்றுநோயும் நீங்கும். இதன் பழங்களைக் குடற்புண் (அல்சர்) உள்ளவர்கள் உண்டால் நல்ல பலனைப் பெறமுடியும்.

### *வேம்பு*

வேப்பம் பூ மலச்சிக்கலை நீக்குகிறது. வேம்பிலே ஆயிரம் மருந்து என்ற ஒரு பழமொழியும் உண்டு. இரசம் வைத்துச் சாப்பிட்டு வந்தால் வயிற்றிலுள்ள பூச்சிகள் மடிந்துவிடும். இது பித்தநீரையும் சமப்படுத்துகின்றது.

வேப்பமிலை, பூ, வேப்பங்காய், வேப்பம் பழம், வேப்பம் பட்டை, வேப்பம் வேர் இவை அனைத்தும் மருந்துப் பொருட்களாக உதவுகின்றன. வேப்பம்பூவை தணலில் காட்டி, தலையில் வைத்துக்கொண்டால் ஈர், பேன் முதலியன பறந்துவிடும். வேப்பம் இலை அல்லது பட்டையினை வெந்நீரில் ஊறவைத்து மருத்துவ குளியலை மேற்கொள்ளலாம்.

### *இஞ்சி*

இஞ்சி பல நோய்களைக் குணப்படுத்துகின்றது. அவையாவன அஜீரணம், தொண்டை, மூக்குநோய்கள், தொய்வு (ஆஸ்த்துமா), யானைக் கால் வியாதி, வயிற்றில் கட்டி, கல்லீரல் நோய்கள், பாண்டுரோகம், நுரையீரல் நோய்கள் என்பன.

மேலும் மல மற்றும் சிறுநீரக கோளாறுகளையும் இஞ்சி குணப்படுத்துகின்றது. இதனால் சாப்பாட்டில் அளவோடு இஞ்சி சேர்த்துக் கொள்வது நல்லது. ஜீரண சக்தியை உண்டு பண்ணுவதுடன், வயிற்றுப்போக்கை இது நிறுத்தும். இஞ்சியில் இரசம், சட்ணி, பட்சணம் என்பன செய்து சுவையாக உண்ணலாம். இஞ்சி பொருளாதார மேம்பாடு வாய்ந்த பண்டமாகையால், இதன் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்துதல் நன்றாகும்.

### *அகத்தி*

மூளை சம்பந்தமான நோய், மயக்கம், கண் எரிவு, மார்பு வலி, வாய்ப்புண் இவை நீங்கும். தலைவலிக்கு இதன் சாற்றை நெற்றியில் தடவலாம்.

தொண்டை வலி, ஜீரண சக்தி நலமாகும். வாய்வுக் கோளாறுகள் கடுமையாக உள்ளவர்கள் தவிர்த்தல் நன்று. இதில் சித்தகத்தி, பேரகத்தி எனும் இரு வகைகள் நம்பிரதேசத்தில் காணப்படுகின்றன. இது சாதாரணமாக ஒவ்வொருவரதும் வீட்டுத் தோட்டத்தில் உண்டாக்கிப் பலன் பல பெறலாம். வர்த்தகரீதியாகவும் நல்ல மதிப்புண்டு.

### *அறுகு*

அறுகம் புல்லில் விற்றமின், தாது, உப்பு அதிகம் உள்ளதால் உடலுக்கு தெம்பு கிடைக்கின்றது. இதன் சாற்றை எடுத்து ஐந்து பங்கு நல்ல நீருடன் கலந்து குடிக்க நரம்புத் தளர்ச்சி, மலச்சிக்கல், சளி, இரத்த அழுத்தம் இவைகள் நீங்கும். அறுகானது மத சம்பந்தமான விடயங்களிலும், ஏனைய பொது வைபவங்களிலும் முக்கியம் பெறுகின்றது. இதனை ஒவ்வொரு வரும் வீடுகளில் பூச்சாடிகளில் அலங்காரத்தாவரம் போன்று வளர்த்துப் பலன் பல பெறலாம்.

### *பூடு (உள்ளி)*

இதன்சாறு, குடற்புண், தோல் வியாதி, தொய்வு, சளி, இருமல், இரப்பை, நுரையீரல் சம்பந்தமான நோய்கள், இரத்த அழுத்தம், நிமோனியா, சுரம், வாதம் போன்றவற்றைக் குணமாக்கும். இருதய வியாதிகளுக்கும், உடல பருமனைக் குறைப்பதற்கும் முள்ளந்தண்டு சம்பந்தமான நோய்களை குறைப்பதற்கும் இது உபயோகமாகும்.

வாரமொருமுறையாவது பூடு உணவில் சேர்ப்பது நல்லது. சளியை வெளியேற்றும், சிறுநீர் சுரப்பை மீதப்படுத்தும், மலத்தை இளக்கும், வாதத்தை குறைக்கும், ஜீரண நீரிரைப் பெருக்கும், இருமலைப் போக்கும், மூலநோய் உள்ளவர்கள் அதிகம் உண்பது நல்லதல்ல.

### *முளைக்கீரை*

முளைக்கீரை மிகுந்த சக்தியை அளிக்கும். இதில் விற்றமின் ஏ, சீ, இரும்புச்சத்து, சுண்ணாம்புச் சத்து, பொஸ்பரஸ் இவை அதிகளவில் உண்டு. சொறி, சிரங்கு உள்ளவாகள் உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளலாம். காசத்தைப் போக்கும், நரையைத் தடுக்கும், நல்ல பசியைத் தூண்டும். மூளைக்கீரையை நாம் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடமுடியும். ☑

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை*
*ஆஅதும் என்னு மவர்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## புதிய சபாநாயகருக்கான தேர்தலும்; அரசு சந்தித்துள்ள முதல் தோல்வியும்...!

இலங்கையின் பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் அனைவரும் எதிர்பார்த்தது போலவே மிகவும் பரபரப்புடனும், பல்வேறுபட்ட ஊகங்களுடனும் நேற்றுக் காலை ஆரம்பமாகி அரசியல் அநாகரிகத்துடன் கூடிய கோமாளித்தனமான நிகழ்வுகளுடன் நடந்தேறி முடிந்துள்ளது.

இது வெறுமனே புதிய நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத் தொடரின் முதலாம் நாள் நிகழ்வு மட்டும்தான் என்பதல்ல... இப்புதிய நாடாளுமன்றத்திற்கான சபாநாயகரை அதாவது, சுதந்திர இலங்கையின் பதினாறாவது சபாநாயகரை தேர்ந்தெடுப்பதற்கான முக்கியத்துவம் வாய்ந்த அமர்வாகவும் இது விளங்கியது.

இந்த அமர்வுக்கான நாள் குறிக்கப்பட்டதிலிருந்தே இது அரசுக்கும் ,எதிர்க்கட்சிக்கும் இடையேயான பலப்பரீட்சைக்கான நாளாக கருதப்பட்டதுடன், புதிய அரசின் எதிர்கால ஆயுள் பலத்தின் வலுவை மதிப்பீடு செய்வதற்கான நாளாகவும் எதிர்பார்க்கப்பட்டது.

அறுதிப்பெரும்பான்மை பலமற்ற, அதனை எப்படியாவது நிரூபிக்க வேண்டிய நிலையிலுள்ள, முரண்பாடுகள் அதிகமுள்ள கூட்டுக் கட்சிகளால் உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு சபாநாயகர் தெரிவுக்கான தேர்தலில் தனது பலத்தை நிரூபித்து சபாநாயகர் பதவிக்கான தனது பக்க வேட்பாளரை வெற்றிபெறச் செய்ய ஜனாதிபதி தலைமையில் மேற்கொண்ட திரைமறைவு பகீரத முயற்சிகள் எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை என்றே கூறவேண்டும்.

நேற்று நடைபெற்ற சபாநாயகர் பதவிக்கான தேர்தல் என்றுமில்லாத வகையில் ஒரே நாளில் அதுவும் புதிய நாடாளுமன்றத்தில் முதற் கூட்டத் தொடரின் முதல் நாள் அமர்விலேயே மூன்று தடவைகள் நடத்தவேண்டிய அசிங்கம் நிகழ்ந்தேறியுள்ளமை - இலங்கையின் ஜனநாயக அரசியல் பாரம்பரியத்தின் அவலநிலையையே உணர்த்துவதாக உள்ளது.

ஜனநாயக அரசியல் கோட்பாடுகளில் தேர்தல் முறைமையும், வாக்களிக்கும் முறைமையும் மிகவும் புனிதமானதும், இரகசியமானதுமான செயற்பாடுகளாக வரையறுக்கப்பட்டுள்ளதுடன், அவற்றை அமைதியாகவும், எவரையும் புண்படுத்தாமலும் மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளபோதிலும் அவற்றை இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எப்படி மதித்து செயற்பட்டார்கள் என்பதை நேற்றைய சபாநாயகர் தேர்தலின்போது தெளிவாக உணர முடிந்தது.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வானது அரசியல் முதிர்ச்சியோ, நாகரிகமோ இல்லாத ஜனநாயகப் பண்புகளின் அடிப்படைகளையே புறந்தள்ளிவிட்டு தான்தோன்றித்தனமாக, இன்னும் சொல்வதானால் நாடாளுமன்றம் என்ற ஆட்சி மன்றத்தையே அடாவடித்தனங்களின் மையமாகக் கருதிச் செயற்படும் உறுப்பினர்களின் குறளிக் கூத்து நடவடிக்கைளால் ஒழுங்கற்று காணப்பட்டதை அவதானிக்கும் போது இலங்கையில் நாடாளுமன்றத்தின் எதிர்காலம் பற்றிய சந்தேகம் அவல அலைகளை எழுப்பவே செய்தது.

இரகசியமாகச் செய்யவேண்டிய வாக்களிப்பை அநாவசியமாக - அநாகரிகமாக பகிரங்கமாக்கி நாடாளுமன்ற நடைமுறைகளை அவமதித்த உறுப்பினர்களும் சபாநாயகர் தேர்தலுக்கு முன்னும் பின்னும் மூன்று வாக்களிப்பின் போதும் அரசியல் பண்பாடுகளைப் புறந்தள்ளிக் கூச்சலிட்டு குழப்பம் ஏற்படுத்தி வாக்குப் பெட்டியின் மீது ஏறியமர்ந்து காடைத்தனம் புரிந்த உறுப்பினர்களும் நிராகரிக்கப்பட்ட வாக்கொன்றைப் போட்டதன் மூலம் இரண்டாவது வாக்களிப்புக்கு வழிசமைத்த உறுப்பினரும் தாம் இந்த நாடாளுமன்றத்தில் மக்களின் பிரதிநிதிகளாக இயங்க எந்தவிதமான யோக்கியதையும் அற்றவர்கள் என்பதை தெளிவாகவே நாட்டுமக்களுக்கு உணர்த்தியுள்ளனர் என்று கூறுவதில் தவறே கிடையாது.


இவையாவும் நாடாளுமன்றத்தைக் கேலிக் கூத்தாக்கும் நடவடிக்கைகளில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களில் பெரும்பாலானோர் குறிப்பாகத் தென்னிலங்கையைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளதையே காட்டுகிறது. வடக்கு - கிழக்கிலிருந்து தெரிவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் இந்த விடயத்தில் அமைதியாகவும், நாகரிகமாகவும் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்து நடந்து கொண்டமை நிறைவு தரும் விடயமாகும்.

ஒரு சபாநாயகரை தேர்ந்தெடுக்க, ஒழுங்காகவும் அமைதியாகவும் ஒரு தடவை தேர்தலை நடத்தி முடிக்க முடியாது திணறும் ஒரு அரசால் தேசிய முக்கியத்துவம் மிக்க இனப்பிரச்சினை, சமாதானப் பேச்சுவார்த்தை போன்ற விடயங்களில் எவ்வாறு நியாயமாகவும், நாகரிகமாகவும் தீர்க்கமான முடிவை எடுக்க முடியும் என்ற கேள்வியே தற்போது அனைவர் மனதிலும் எழுவதும் யதார்த்தமானதே.

புதிய சபாநாயகராக தெரிவான ஐக்கியதேசிய முன்னணியின் வேட்பாளரான லொக்கு பண்டார எப்படி அமைதியாகவும், சாதுரியமாகவும் கொண்டு நடத்தப் போகிறார் என்பதே இப்போது கோடி டொலர் பெறுமதியான கேள்வியாகும்.

எது எப்படியோ புதிய அரசு தன் முதல் தோல்வியை முதல் நாளிலே சந்தித்ததும் அவமானகரமான விடயமேயாகும்.

# நாடும் நடப்பும்




# மறவன்புலோ, கோகிலாக்கண்டி மக்களுக்கு மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு

## பாதுகாப்புத் தலைமையகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ மற்றும் கோகிலாக்கண்டி பகுதியிலுள்ள வீடுகள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன், இந்த பகுதியிலுள்ள வீடுகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு மிதிவெடிகள், மற்றும் வெடிப்பொருட்களினால் ஏற்படும் விபரீதங்கள் குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கும் கருத்தரங்கு கடந்த திங்கட்கிழமை கோகிலாக்கண்டி மகால்ட்சுமி வித்தியாலயத்தில் நடத்தப்பட்டதாக யாழ். பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகம் தெரிவித்துள்ளது.

யு.என்.எச்.சி.ஆர். தொண்டர் நிறுவனத்தின் யாழ். வதிவிட பிரதிநிதிகள் 9 பேரும் இந்த கருத்தரங்கை நடத்தினார்கள். வெடிப்பொருள், மிதிவெடிகள், கண்ணிவெடிகள், போன்றவைகளை அடையாளம் காண்பது எப்படி என்பதையும், அவ்வாறு வெடிபொருட்கள் காணப்பட்டால், அந்த சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டிய செயற்பாடுகள் குறித்தும் இந்த நிறுவன பிரதிநிதிகள் பொதுமக்களுக்கு விளக்கமளித்தார்கள்.

இந்தக் கருத்தரங்கிற்குச் சுமார் 100 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர். 8 ஆவது பொறியியல் படையினரின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்தக் கருத்தரங்கை யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தினர் முன்வந்து செயற்படுத்தினார்.

# யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தெரு நாய்களின் தொல்லை அதிகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

நகரசபைகள், பிரதேசசபைகளால் மேற்கொள்ளப்பட்டு வந்த நாய்களை அழித்தல் தொடர்பான நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருப்பதால், யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தெருநாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

மாநகரசபைகள், பிரதேசசபைகளின்கீழ் தெருநாய்களை அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம். ஆனால், அவ்வாறு பிடிக்கும் நாய்களைக் கொல்வது தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்கள் காரணமாக நாயழிப்பு நடவடிக்கைகள் பல பிரதேசசபைகளாலும் கைவிடப்பட்டுள்ளன. அத்தோடு, யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதனால், தெருநாய்கள் அதிகரித்து வருவதுடன் வீதியால் செல்வோரைக் கடிக்கவும் செய்கின்றன. தற்போது அதிகரித்திருக்கும் வெப்பநிலை காரணமாக யாழ்.மாவட்டத்தில் பல தெருநாய்கள் மற்றும் வளர்ப்பு நாய்களுக்கு நீர் வெறுப்பு நோய் உருவாகக்கூடியநிலை தோன்றியுள்ளது.

இந்நிலை தொடருமானால் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்கவேண்டியநிலை தோன்றுவதுடன், பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டி வரலாம் எனவும் யாழ். போதனாவைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கடந்த 20 நாட்களில் மட்டும் யாழ்.மாவட்டத்தில் 50 இற்கும் மேற்பட்டோர் நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றிருப்பதாக தெரியவருகிறது. (ப)

# தப்பியோடிய இராணுவச் சிப்பாய் குண்டை வெடிக்கவைத்து தற்கொலை

## குளியாப்பிட்டியில் சம்பவம்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஒருவர் கைக்குண்டை வெடிக்கவைத்து தற்கொலை செய்துகொண்டார்.

எம்.டி.ருவான் ஜெயந்த (வயது - 27) என்ற குளியாப்பிட்டியைச்சேர்ந்தவரே தற்கொலை செய்துகொண்டவராவர்.

இவர் இராணுவத்திலிருந்து கடந்த 2000 ஆம் ஆண்டு தப்பியோடினார். பின்னர் இவர் தென்மாகாணசபை உறுப்பினர் ஒருவரின் சாரதியாகப் பணிபுரிந்து வந்தார்.

கடந்த 13 ஆம் திகதி மனைவி வெளியில் சென்றிருந்த சமயம் குறித்த நபர் கைக்குண்டை வெடிக்கவைத்து தற்கொலை செய்ய முயற்சித்தார். குண்டுச்சத்தத்தை கேட்ட அயலவர்கள் இவரை கடும் காயங்களுடன் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

வைத்தியசாலையில் உயிருக்காகப்போராடிய இவர், கடந்த செவ்வாயன்று மரணமானார்.

# வெளிச்சம் சஞ்சிகையின் 85 ஆவது இதழ் வெளியாகியது

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழகத்தின் வெளியீடான 'வெளிச்சம்' சஞ்சிகையின் 85 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன், மாலிகா, த.அகிலன், பொன்.காந்தன், த.ஜெயசீலன், வேலவன், கோபால்நாதன், புதுவை இரத்தினதுரை, கருணைரவி, சோதியா, கல்வயல் வே.குமாரசாமி, இத்தாவில் க.சிவராசா ஆகியோரின் கவிதைகளும், நேசன், ந.சத்திய பாலன் திரோ, ஞானரதன், முல்லைமணி ஆகியோரின் கட்டுரைகளும் இடம் பெறுகின்றன.

இவற்றுடன் முத்து இராதாகிருஷ்ணன், முல்லை ஜேசுதாசன், யோ.கர்ணன், ச.முருகானந்தம், தே.ஜோமயன், சிவாஜினி சிவசங்கர் ஆகியோரின் சிறுகதைகளும், சொ.பத்மநாதனின் மொழிபெயர்ப்புக் கவிதையும், தூது, அஞ்சலி என்பனவும் இடம்பெற்றுள்ளன. அவற்றோடு ஆசை இராசையாவின் அட்டை ஓவியத்தையும் தாங்கி இந்த வெளிச்சம் வெளிவந்துள்ளது.

# கசிப்பு விற்ற இருவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுவந்த இருவருக்கு நேற்று நீதிமன்றத்தில் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஆசாத் லேன், மானிப்பாய் வீதியைச் சேர்ந்த இரத்தினகுமார் இரதன், அராலி வீதி, ஓட்டுமடத்தைச் சேர்ந்த நிக்கலஸ் நிசான் ஆகிய இருவருக்குமே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவருக்கும் தண்டப் பணமாக 20 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 40 ஆயிரம் ரூபாவை செலுத்துவதோடு, 5 ஆயிரம் ரூபா வீதம் 10 ஆயிரம் ரூபாவையும் இருவரும் செலுத்தவேண்டுமென யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கு யாழ்ப்பாண பொலிஸாரால் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ப)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர)ப் பரீட்சை

## அளவையியலும் விஞ்ஞானமும் - பகுதி I ஆசிரியர் K.T.மோகன் மாதிரி வினாத்தாள்

1. அ. முரண்பாட்டுச் சதுரத்தை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் அனுமானங்கள் சரியான வையா? பிழையானவையா? என்பதைத் தீர்மானிக்குக.
   I. சில மாணவர்கள் திறமைசாலிகள் என்பது உண்மையாயின் எந்த மாணவனும் திறைமைசாலியல்ல என்பது பொய்.
   II. எல்லா மாணவர்களும் திறமைசாலிகள் என்பது உண்மையாயின் பல மாணவர்கள் திறமைசாலிகள் அல்ல என்பது உண்மை.
   III எந்த மாணவனும் திறமைசாலி அல்ல என்பது உண்மையாயின் சில மாணவர்கள் திறமைசாலிகள் அல்ல என்பது பிழையாகும்.
   IV சில மாணவர்கள் திறமைசாலிகள் என்பது உண்மையாயின் எல்லா மாணவர்களும் திறமைசாலிகள் என்பது தெளிவு.
   V சில மாணவர்கள் திறமைசாலிகள் அல்ல என்பது பொய்யாயின் ஒரு மாணவனும் திறமைசாலி அல்ல என்பதை ஒருவராலும உறுதி செய்யமுடியாது.
   ஆ) பாரம்பரிய முரண்பாட்டுச் சதுரத்திற்கும் அதுபற்றிய தற்காலத்தைய விளக்கத்துக்கு மிடையிலான வேறுபாட்டைத் தருக.
   இ) பின்வரும் முரண்பாட்டுத் தொடர்புகளை விளக்குக.
   I மறுதலை முரண்பாடு
   II உபமறுதலை முரண்பாடு.

2. அ) எதிர்மாற்றம், மறுமாற்றம், எதிர்வைக்கை என்பவற்றைப் பயன்படுத்தி கீழ்வரும் வாதங்கள் வலிதானவையோ அல்லவோ எனத் துணிக.
   I எல்லாப்பாம்புகளும் ஊர்வன. ஆகவே எல்லா ஊர்வனவும் பாம்புகள்.
   II சில மாங்காய்கள் முற்றிய பழங்கள் அல்ல. ஆகவே சில மாங்காய்கள் முற்றாத பழங்கள்.
   III எந்த மன்னனும் நரம்பியியல் நிபுணன் அல்ல. ஆகவே எந்த நரம்பியல் நிபுணனும் மன்னன் அல்ல.
   IV சில பறவைகள் கிளிகள் அல்ல. ஆகவே சில கிளிகள் அல்லாதன பறவைகள் அல்லாதன.
   ஆ) I எடுப்புக்களையும் வாக்கியங்களையும் வேறுபடுத்துக.
   II உண்மைக்கும் வாய்ப்பிற்கும் இடையிலான வேறுபாட்டைக் கூறுக.
   III அளவையியலின் நடைமுறைப் பயன்பற்றி விளக்குக.

3. அ) வலிதான நியாயத்தொடையொன்றில் ஒரு எடுகூற்று மாத்திரம் குறை எடுப்பாயின் முடிவும் குறை எடுப்பாக இருப்பது ஏன் என்பதை நியாயத்தொடையின் பிரதான விதிகளைக்கூறி விளக்குக.
   ஆ) கீழ்வருவன வலிதான நியாயத்தொடைகளா வலிதற்றவையா என்பதைத் தீர்மானிக்கவும். நியாயத்தொடை வலிதற்றதாயின் மீறப்பட்டுள்ள விதியை / விதிகளைச் சுட்டிக்காட்டி நிகழ்ந்துள்ள போலிகளைக் கூறி விளக்குக.
   I எல்லா அரசாங்க ஊழியர்களும் நாட்டிற்கு சேவையாற்றினாலும் நாட்டிற்கு சேவையாற்றிய ஒருவரேனும் மதிக்கப்படுவதில்லை. ஆகவே அரசாங்க ஊழியர்கள் மதிக்கப்படுவதில்லை.
   II யானைகள் வனத்தில் வாழ்கின்றன. வனத்தில் வாழ்வன சில பயமுள்ளவை. ஆகவே யானை பயமுள்ளது.
   III சமூக விஞ்ஞானிகள் இயற்கை விஞ்ஞானிகள் போல சோதனைகள் செய்யாததினால் சமூகவிஞ்ஞானிகள் இயற்கை விஞ்ஞானிகள் அல்ல.
   IV தேர்வுநாடிகள் மட்டுமே விளையாடுவோராயின் விளையாடுவோர் மட்டுமே சித்தியடைவாராயின் எந்தத் தேர்வுநாடியும் சித்தியடையமாட்டார் என முடிவு செய்யலாம்.

4. அ) கீழ்வரும் வாதங்களை வகுப்புக்களின் அடிப்படையில் குறியீட்டில் தந்து வென்வரைபடத்தின் மூலம் அவற்றின் வாய்மைத் துணிக.
   I சிறுவர்கள் மட்டுமே வேடிக்கையை விரும்புவதுடன் வேடிக்கையை விரும்புபவர்கள் மாத்திரமே சுகதேகிகளாவர். ஆகவே சிறுவர்கள் சுகதேகிகள்.
   II அரிஸ்ரோட்டிலும் பிளேட்டோவும் மெய்யியலாளராக இருப்பதனால் மெய்யியலாளர்கள் புத்திசாலிகள் ஆவர்.
   III கிளி சிவப்பு அல்ல ஏனெனில் எல்லா சிவப்பு பொருட்களும் பச்சை அல்ல அத்துடன் கிளி பச்சை அல்ல.
   IV ஜயவீர நேர்மையானவன் அல்ல ஏனெனில் எல்லா வியாபாரிகளும் நேர்மையானவர்கள் என்பதுடன் ஜயவீர ஓர் வியாபாரி அல்ல.
   ஆ) வகுப்பு அளவையியலில் இடம்பெறும் கீழ்வரும் பதங்களைப் பற்றி சிறு குறிப்புக்கள் தருக.
   I வகுப்பிலி II வகுப்பு இணைப்பு III நிரப்பி வகுப்பு IV இணையாத வகுப்புக்கள்

### பகுதி II

5. அ) $(P \land -Q)$ என்பதற்கான எதிர்மறையான குறியீட்டு வாக்கியத்தை இணைப்புக் குறியீட்டைப் பயன்படுத்தாது தருவதோடு உண்மை அட்டவணையைப் பயன்படுத்தி அவை எதிர்மறையாய் இருப்பதையும் காட்டுக.
   ஆ) பின்வரும் வாக்கியங்கள் பொய்யாவது எப்போது என்பதை உண்மை அட்டவணை நேரல் முறையைப் பயன்படுத்தித் தீர்மானிக்குக.
   I அவனும் அவளும் வெளிநாடு சென்றிருந்தால் அப்போது அதுவிடுமுறையாகும்.
   II ஒன்றில் பரீட்சை இலகுவானதாயின் ஆயினே பரீட்சார்த்திகள் நன்கு சித்தி பெறுவார்கள் அல்லது பரீட்சார்த்திகள் நன்கு சித்தி பெற்றால் அவர்கள் நன்கு படித்துள்ளார்கள்.
   இ) 'தேர்தலும் அதேபோல் தேர்வும் நெருங்கிவருமாயின் ஒன்றில் வாக்காளர்கள் அட்டை வரும் அல்லது அனுமதி அட்டைவரும்.'
   இவ்வாக்கியத்தினை குறியீட்டில் தந்து குறியீட்டாக்கம் செய்யப்பட்ட இவ்வாக்கியம் பொய்யாயின் உண்மை அட்டவணையைப் பயன்படுத்தாது கீழ்வரும் ஒவ்வொரு குறியீட்டு வாக்கியங்களும் உண்மையோ பொய்யோ அல்லது அவற்றின் உண்மைப் பெறுமானத்தை தீர்மானிப்பது சாத்தியமற்றதோ என்பதை துணிக. இவ் ஒவ்வொரு சூத்திரத்தினதும் உண்மைப் பெறுமானத்தை அவ்வவ் வாக்கியங்களில் வரும் ஒரே ஒரு மாறியின் உண்மைப் பெறுமானத்தை மட்டும் பயன்படுத்தி தீர்மானிக்குக.
   I $[(-P \land Q) \rightarrow (R \lor S)]$
   II $[(-Q \land (R \rightarrow -S)]$
   III $[(-R \land S) \rightarrow T]$
   ஈ) கீழ்வரும் இணைகளின் சூத்திரத்தை சமனானவையோ அல்லது முரணானவையோ அல்லது சமனோ முரணோ அல்லாதவையோ என்பதை உண்மையட்டவணையின் துணையுடன் தீர்மானிக்குக.
   I $(P \rightarrow -Q)$, $(P \land Q)$
   II $(-P \lor Q)$, $-(P \land -Q)$

6. உண்மையட்டவணை நேரல் முறையைப் பயன்படுத்தி கீழ்வரும் பிரச்சினைகளைத் தீர்க்கவும்.
   அ) களவு பற்றிய வழக்கு விசாரணையில் A,B என்னும் இருவர் சாட்சியமளித்தனர். பியதாச அல்லது மார்ட்டின் இக்களவில் சம்மந்தப்பட்டிருப்பராயின் சிறிலும் கமலும் கூட இதில் சம்மந்தப்பட்டிருப்பார்கள் என A கூறினான். சிறில் சம்மந்தப்பட்டிருப்பாராயின் கமல் சம்மந்தப்படவில்லை என B கூறினான். நீதிவான் பியதாச குற்றவாளி அல்ல என்னும் முடிவிற்கு வந்தார். மேற்படி கூற்றின் சாட்சியங்கள் இருவரும் உண்மை பேசினர் எனின் நீதிவானின் தீர்ப்பு சரியானதா?
   ஆ) A, B என்ற இரு விஞ்ஞானிகள் தமது கருத்துக்களைப் பின்வருமாறு கூறினார்.
   A: உலகயுத்தம் ஆரம்பித்தால் உலகின் உயிரினங்கள் அழியும் என்பது சந்தேகத்திற்கிடமற்றது.
   B: உலகயுத்தம் ஆரம்பமாகப் போவதுமில்லை உலகின் உயிரினங்கள் அழியும் என்பது நடக்கப்போவதுமில்லை.
   இவ்விரு விஞ்ஞானிகளின் கருத்துக்களும் சரியானவை என நாம் ஏற்பதாயின் உலகயுத்தம் ஆரம்பமாவது பற்றி நாம் கொள்ளக்கூடிய முடிவு என்ன?
   இ) நான் தேர்வில் சித்தியடைந்தால் பல்கலைக்கழகம் செல்லப் போவதில்லை என சரத் கூறுகின்றான். இதைக்கேட்ட திலக் சரத் தேர்வில் சித்தி பெறமாட்டான் என்பதைத் தான் இது உணர்த்துகிறது எனக் கூறுகிறான். திலக்கின் முடிவு சரியானதா?
   ஈ) 'பேச்சுவார்த்தை தொடருமாயின் யுத்தம் ஆரம்பிக்காது அத்துடன் பேச்சுவார்த்தை தொடராவிடின் யுத்தம் ஆரம்பிக்கும்' என்னும் கூற்றிலிருந்து பேச்சுவார்த்தை தொடருவதுடன் யுத்தமும் ஆரம்பிக்கும் என்பது பொய் என A முடிவு செய்தான். பேச்சுவார்த்தை தொடராது என்றாலொழிய யுத்தம் ஆரம்பமாகாது எனும் முடிவுக்கு B வந்தான். A, B என்னும் இருவரினதும் முடிவின் வலிதினைப் பரிசோதிக்குக.

7. அ) பெறுகைமுறை மூலம் உதாரணமாகக் கொண்டு மறுத்து விதித்தல் முறையை விளக்குக.
   ஆ) நேரல் பெறுகை என்பதை உதாரணம் தந்து விளக்குக.
   இ) கீழ்வரும் தேற்றங்களைப் பெறுகை முறையினால் நிறுவுக.
   I $[(P \land Q) \rightarrow (P \leftrightarrow Q)]$
   II $[(P \rightarrow Q) \lor (Q \rightarrow R)]$

8. கீழ்வரும் வாதங்களைக் குறியீட்டில் தந்து எடுகூற்றுக்களிலிருந்து முடிவைப் பெறுவதன் மூலம் அவை வலிதானவை எனக் காட்டுக.
   அ) இலங்கை, அவுஸ்ரேலியா ஆகிய இரண்டும் கிரிக்கெற் போட்டியில் வெற்றி பெறுவனவல்ல. இலங்கை கிரிக்கெற் போட்டியில் வெற்றிபெற்றுள்ளது. ஆகவே அவுஸ்ரேலியா கிரிக்கெட் போட்டியில் வெல்வதல்ல.
   ஆ) விஞ்ஞானம், ஒழுக்கம் ஆகிய இரண்டும் வளர்ச்சியடைந்தால் மனிதனும் வளர்ச்சியடைவான். ஆகவே மனிதன் வளர்ச்சியடையவில்லையாயின் ஒன்றில் விஞ்ஞானம் வளர்ச்சியடையவில்லை அல்லது ஒழுக்கம் வளரவில்லை.
   இ) அளவையியலும் கணிதமும் இலகுவானதல்ல. ஆகவே ஒன்றில் அளவையியல் இலகுவானதல்ல அல்லது கணிதம் இலகுவானதல்ல.
   ஈ) நாடு அபிவிருத்தியடையும் எனின் பொருளாதாரம் முன்னேறும் என்பதுடன் பொருளாதாரம் முன்னேறினால் நாடு அபிவிருத்தியடையும் ஆகவே நாடு அபிவிருத்தியடையும் ஆயினாயினே பொருளாதாரம் முன்னேறும்.

### பகுதி III

9. கீழ்வரும் போலிகளை உதாரணங்கள் தந்து விளக்குக.
   I சுழல்நியாயப் போலி II நடுப்பதவிலக்குப் போலி
   III வியாதிப்போலி IV ஏதுமறுப்புப் போலி

10. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளில் உள்ள போலிகள் எவை என எடுத்துக்காட்டி ஒவ்வொரு போலியும் நிகழ்ந்துள்ள விதத்தைக் சுருக்கமாக விளக்குக.
   I தம்புல்ல சர்வதேச விளையாட்டரங்கில் இலங்கை கிரிக்கெட் அணி மிகச் சிறப்பாக ஆடியது. ஆகவே இலங்கை அணித்தலைவரும் உபதலைவரும் விக்கெற் காப்பாளரும் மிகச் சிறப்பாக ஆடினர்.
   II நாட்டின் வேறு பாகத்தை விடவும் அதிகமான பாடசாலைகள் கொழும்பு நகரில் உள்ளன. அத்துடன் வேறு இடங்களைவிடக் கொழும்பிலேயே அதிக அளவில் குற்றங்கள் புரியப்படுகின்றன. ஆகவே குற்றச் செயல்களை நீக்கவேண்டுமாயின் பாடசாலைகளை இல்லாதொழிக்க வேண்டும்.
   III கடந்த ஐந்து வருட காலத்தினுள் அவர் ஒரு போதும் இந்தியா செல்லவில்லை ஆகவே அவர் ஒருபோதும் இந்தியா செல்லவில்லை.
   IV ஒழுக்கத்தைப் பற்றி அப்பிரசாரகர் கூறும் கருத்துக்களை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது ஏனெனில் அவர் சிறுவர் துஷ்பிரயோக குற்றத்தைப் புரிந்துள்ளவராவார்.
   V எமது பாதுகாப்பு அமைப்பில் சேர்வது தான் இறுதியாகப் புத்திசாலித்தனமானது. நீங்கள் சேரவில்லையாயின் யன்னல்கள் உடைக்கப்படும் கார்கள் சேதமாக்கப்படும் நீங்கள் பணத்தை இழக்கநேரிடும் என்பதைக் கவனத்தில் கொள்ளுவீர்கள்.

11. கீழ்வருவனவற்றில் நான்கு பற்றிச் சிறுகுறிப்புக்கள் தருக.
   I நியாயமாலை II சுருக்கநியாயத்தொடை
   III இருதலைக்கொள்ளிவாதம். IV சிந்தனை விதிகள்.
   V பதங்களின் கருத்துக்குறிப்பும் அகலக்குறிப்பும்.

12. இந்திய அளவையியலிருந்து பின்வருவன பற்றிக் குறிப்புக்கள் தருக.
   I ஹேத்துவாபாசா II அனுபாலபதி
   III சுவர்த்தானுமான IV பிரத்தியக்ஷ V வியாப்தி

### பகுதி II

### பகுதி I

1. அ) பின்வருவனவற்றை உதாரணங்களுடன் வேறுபடுத்துக.
   I விஞ்ஞானமும் போலி விஞ்ஞானமும்.
   II சமூக விஞ்ஞானங்களும் பௌதிக விஞ்ஞானங்களும்.
   ஆ) உளவியலில் விஞ்ஞானப் பன்புகளை கூறுக.
   இ) விஞ்ஞான நோக்கின் இயல்புகள் யாவை.
   ஈ) விஞ்ஞான முறை என்பதன் மூலம் நீர் புரிந்து கொள்வது என்ன?

2. அ) சோதிடத்தினை விஞ்ஞானம் எனக் கருதுகிறீரா?
   ஆ) சில அவதானங்களைத் திரும்பச் செய்யலாம், ஆனால், எல்லா அவதானங்களையும் திரும்பச் செய்யமுடியாது? விளக்குக.
   இ) 'விஞ்ஞானம் முன்னேற்றமான கருதுகோள்களினாலும் அவற்றைச் சோதிப்பதனாலும் பிரச்சினைகளைத் தீர்க்கின்றது' ஆராய்க.
   ஈ) முழு நிறைவான பரிசோதனை என்பதைவிளக்குக.

3 கீழ்வரும் ஒவ்வொன்றையும் உதாரணம் தந்து விளக்குக.
   அ) கருதுகோள் ஒப்புமை அனுமானம்.
   ஆ) உள்ளடக்க விதிக்காட்டுரு.
   இ) தீர்ப்புச் சோதனை
   ஈ) வர்ணணைக் கருதுகோளும், ஆளும் கருதுகோளும்.

4. விஞ்ஞானத்தையும், விஞ்ஞானம் அல்லாததையும் வேறுபிரித்து கொப்பேரிய அளவை விதியைக் கூறுக. ஓர் கூற்று விஞ்ஞான ரீதியானதாக இருப்பதற்கு எதிர்பார்க்கப்படும் பண்புகளை உதாரணம் தந்து விளக்குக.
   ஆ) 'விஞ்ஞானத்தின் முன்னேற்றமும் கருவிகளின் முன்னேற்றமும் ஒன்றில் ஒன்று தொடர்புடையது' இக் கூற்றினை ஆராய்க.

### பகுதி II

5. அ) நிகழ்தகவின் பாரம்பரிய மற்றும் பரம்பல் வியாக்கியானங்களை முன்வைக்குக.
   ஆ) பின்வருவனவற்றை உதாரணங்கள் தந்து விளக்குக.
   I) சார்புடைய நிகழ்ச்சியும், சாராநிகழ்ச்சியும்.
   II) பூச்சிய நிகழ்தகவும் நிகழ்தகவு ஒன்றும்.
   இ) சீட்டுக்கட்டு ஒன்றிலிருந்து மூன்று சீட்டுகள் பிரதிவைப்பின்றி எடுக்கப்படுகின்றன. எடுக்கப்படுகின்ற சீட்டுக்கள் ஒரே இனமாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?
   ஈ) மனிதன் ஒருவன் ஆண் அல்லது பெண் ஆகமட்டுமே இருக்கலாம், ஓர் ஆண் 60 வயது வரை உயிர்வாழ்வதற்கான நிகழ்தகவு 0.7 ஆகும். ஓர் பெண் 60 வயது வரை உயிர் வாழ்வதற்கான நிகழ்தகவு 0.4 ஆகும். எனின் X என்னும் மனிதன் 60 வயது வரை உயிர்வாழ்வதற்கான நிகழ்தகவை ஒரு பின்னமாகக் கூறுக.


6. அ) புள்ளிவிபரவியலில் உள்ள கீழ்வரும் எண்ணக் கருக்களுக்கு சிறு குறிப்புத் தருக.
   I தொடர்பாக்கல்
   II காலணை விலகல்.
   ஆ) புள்ளி விபரவியலில் ஏற்படும் மாதிரி தவறுகள் பற்றிக் குறிப்பு எழுதுக.
   இ) சமூக விஞ்ஞானங்களில் புள்ளியியலின் தொழிற்பாடுகளைத் தெளிவாகக் கூறுக. புள்ளியியல் பிரயோகம் சமூகவிஞ்ஞானங்களை மேலும் பிறவயமாக்குவதற்கு உதவுகின்றதா?

## ஈராக்கிற்கு அனுமதி வழங்கப்பட்ட

# எண்ணைக்கு உணவு திட்டத்தில் பெரும் மோசடி இடம்பெற்றுள்ளது

## விசாரிக்க ஐ.நா. சபை அனுமதி

ஈராக்கில் எண்ணெய்க்கு பதில் உணவு என்ற ஐ.நா. திட்டத்தில் இடம்பெற்ற மாபெரும் ஊழலை



ஆராய ஐ.நா. சபை தனது அனுமதியை வழங்கியுள்ளது.

மேற்படி ஐ.நா. திட்டம் மனித நேயத்தின் பேரில் ஐ.நா. சபையினால் கொண்டுவரப்பட்ட ஒன்று இந்த திட்டத்தால் ஈராக் மக்கள் அடிப்படைப் பொருட்களை வாங்கக்கூடியதாக இருந்தது.

ஈராக் ஆளும் சபையின் ஆலோசகர் பி.பி.சிக்கு கருத்துத் தெரிவிக்கையில்-

ஐ.நா.சபையினால் கொண்டுவந்த இந்த திட்டத்தால் சதாம் ஹுசேன் தனது செல்வாக்கை உலக நாட்டில் பெற்றார் எனக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - முன்னைய ஈராக் தலைவர் லஞ்சம் கொடுத்து வெளிநாட்டு வியாபாரிகளையும், பத்திரிகையாளர்களையும் ஈராக்குக்கு கொண்டுவந்தார் எனவும் தெரிவித்தார்.

அமெரிக்காவினால் செயற்படுத்தப்படும் ஆளும் சபையில் ஆலோசகராகக் கடமையாற்றும் பிரித்தானிய ஆலோசகர் கூல்டி கன்கீஸ் - ரைலிசிமா கருத்துத் தெரிவிக்கையில்-

ஐ.நா.சபையின் மேற்படி திட்டம் சதாமுக்கு ஒரு சாதகமான ஊடகமாக இருந்தது என்றும் இதனால் அவர் சர்வதேச ஆதரவை பெற்றார் எனவும் தெரிவித்தார்.

குறைந்தது 10 பில்லியன் அமெரிக்க டொலர் முன்னைய ஆளும் கட்சியால் லஞ்சமாகவும், எணணெய் விற்பனையாலும் பெறப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு சபை இந்த ஊழலை விசாரிப்பதைப் பற்றி ஐ.நா.சபை எடுத்துள்ள தீர்மானத்தை வரவேற்றுள்ளது. அத்தோடு, இந்த ஊழலில் சம்பந்தப்பட்ட அனைவரையும் ஒத்துழைப்பு நல்கும்படி கேட்டுள்ளது.

ஒவ்வொரு முறையும் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டபோது பத்துவீத தரகு வைக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# சவுதி குண்டு வெடிப்பிற்கு அல்கொய்டாவே காரணம்

## அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவிப்பு

சவுதியின் தலைநகர் ரியாட்டில் இடம்பெற்ற குண்டுத் தாக்குலில் இரு படையதிகாரிகள் உட்பட நால்வரின் கொலைகளுக்கும், 148 பேர் காயமடைந்தமைக்கும் அல் - கொய்டா அமைப்பே காரணமென அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.



அத்துடன், அமெரிக்க அரச அதிகாரிகளும் பின்லேடன் அமைப்பே இந்தக் கொலைகளை மேற்கொண்டுள்ளதென தெரிவித்துள்ளது. சவுதி அரேபியாவின் நிர்வாகத்தை செயலிழக்கச் செய்வதற்காகவே இந்தக் குண்டுத் தாக்குதலை அல்கொய்டா மேற்கொண்டது என அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்தார்.

உலக நோக்கு

சவுதி பொலிஸார் இஸ்லாமிய தீவிரவாதிகளுடன் மோதல்களில் கடந்த 15 நாட்களாக ஈடுபட்டு வருகின்றனர். குண்டு நிரப்பப்பட்ட ஐந்து கார்களை சோதனைகளின்போது கண்டுபிடித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பயங்கரவாதத்தை தடுப்பதற்கு ஒவ்வொரு சவுதி அரேபியர்களும் பாதுகாப்பு படையினர் போன்று செயற்படவேண்டும் என மன்னர் அப்துல்லா தெரிவித்தார்.

# ஐ.நாவில் சைப்பிரஸின் தீர்மானத்தை ரஷ்யா வீட்டோவால் நிராகரித்தது

சைப்பிரஸின் இரு இனங்களான கிரிக் சைப்பிரியட்டும், துருக்கியர்




சைப்பிரியட்டும் இணைவதற்கென ஐக்கிய நாடுகள் சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஒன்றுக்கு ரஷ்யா வீட்டோ அதிகாரங்களைப் பிரயோகித்து தடைசெய்துள்ளது.

மக்கள் கருத்துக் கணிப்பொன்று வெளியார்களின் குறுக்கீடுகள் இல்லாது நடத்தப்படவேண்டும் என ரஷ்யாவின் ஐக்கிய நாடுகளுக்கான உதவித் தூதுவர் ஜெனாடி கற்ரிலோ தெரிவித்தார்.

பாதுகாப்புச் சபையின் 14 அங்கத்துவ நாடுகள் இரு சைப்பிரசுகளும் இணையவேண்டும் என்பதற்கு சார்பாகவே வாக்களித்திருந்தன.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் கோபி அனான் மசோதாவை ஆதரிக்குமாறு கேட்டிருந்தார். இரு சைப்பிரசுகளும் இணைந்தால், சமாதான பணிகளை மேற்கொள்வதற்கும், போர் ஆயுதங்களை சைப்பிரசுக்கு விற்பதைத் தடைசெய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது.

சைப்பிரஸ் பிரிந்துள்ள இரு பகுதிகளின் தலைவர்களும் சமரசமான தீர்வு ஒன்றை காண்பதற்கு தவறிய பின்னரே ஐக்கிய நாடுகள் சபை தீர்விற்கான திட்டங்களை தெரிவித்திருந்தது.

ஆனாலும் அமெரிக்காவும், இங்கிலாந்தும் ஐக்கிய நாடுகளின் தீர்மானத்திற்கும் அதிக ஆதரவை வழங்குவதற்கு முன்வந்தது என பாதுகாப்புச் சபையின் அங்கத்தவர் பலர் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதேவேளை, எதிர்ப்புத் தெரிவித்தவர்களும் ஆதரவு தெரிவித்தவர்களும் ஐக்கிய நாடுகள் சபைச் செயலர் கோபி அனானின் கருத்துக்களை ஆதரித்திருந்தன. இரு சைப்பிரசுகளும் ஒன்றிணைந்தால் ஐரோப்பிய ஆணையத்தில் மேமாதம் இணைய முடியுமென தெரிவிக்கப்பட்டது.

## டயானா உயிரிழக்கும் படத்தை ஒளிபரப்பு செய்த

# அமெரிக்க செய்தி நிறுவனத்தை அவரது சகோதரர் கண்டித்துள்ளார்



வேல்ஸ் இளவரசி டயானா உயிரிழக்கும் படத்தை ஒளிபரப்பு செய்த அமெரிக்க செய்தி ஸ்தாபனத்தை கண்டித்து அவரின் சகோதரர் 'அதிர்ச்சியும் கவலையும் அடைந்தேன்' எனக் குறிப்பிட்டார்.

வேல்ஸ் இளவரசி டயானாவின் கார் விபத்து நடந்தவுடன் பாரிஸில் எடுக்கப்பட்ட இந்தப் படம் அமெரிக்க நெற்வேக் சி.பி.எஸ். என்ற செய்தி ஸ்தாபனத்தால் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

டயானாவின் சகோதரரான ஸ்பென்சர் பிரபு தமது வலுவான கண்டனத்தை தமது குடும்பம் சார்பாகத் தெரிவித்தார்.

முன்னைய பக்கிங்காம் அரசமாளிகை பேச்சாளர் டிக் ஆபிர்ரார் கருத்துத் தெரிவிக்கையில்-

இந்த ஒளிபரப்பு ஒரு அழகில்லாத சேவை என தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் - இது மிகவும் வேதனையான செயல். அதுவும் டயானாவின் இரு பிள்ளைகளை பொறுத்தமட்டில் இளவரசர்கள் வில்லியம், ஹரி இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

அவர்கள் இந்த நினைவுடன் காலம் பூராவும் வாழவேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமக்கு ஆச்சரியத்தையும், வியப்பையும் இந்த நிகழ்ச்சி தந்ததென்றும் இப்படியான நிகழ்ச்சிகளை அமெரிக்கா நெற்வேக் தருகிறது என்பது நம்பமுடியாமலிருப்பதாகவும் கூறினார்.

டயானாவுடன் கார் விபத்தில் உயிரிழந்த டோடியின் தந்தைகூட சி.பி.எஸ் ஒளிபரப்பு நிலையத்தை வன்மையாகக் கண்டித்தார்.

சி.பி.எஸ் தமது ஒளிபரப்பைப் பற்றி செய்தி தெரிவிக்கையில்-

இந்தப் படங்கள் பத்திரிகையாளர்களின் தொகுப்பு என்றும் வைத்திய முதல் உதவி பற்றிய படங்களாகும் எனவும் சி.பி.எஸ். தெரிவித்தது. அது மேலும் தெரிவிக்கையில்-

மேற்படி படங்கள் பிரான்ஸ் அரசின் 4000 பக்க அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டவை என்றும் இதுவரை ஒளிபரப்பு செய்யப்படாதவை என்றும் குறிப்பிட்டது.

பி.பி.சி. யின் அரச மாளிகை செய்தியாளர் பீற்றா ஹண்ட் சி.பி.எஸ். இன் தொலைக்காட்சி சேவை ஒரு மணித்தியாலமாக இவற்றை ஒளிபரப்பு செய்ததாகவும் அதில் கறுப்பு, வெள்ளை படங்கள் 15 நிமிடமாக காட்டப்பட்டதாகவும் அவற்றில் டயானா தெளிவாக தெரிந்தார் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன், பிரிட்டன் பத்திரிகைகள் இப்படியான படங்களை பிரசுரிப்பதில்லை என முடிவு எடுத்திருந்தன. ஏனெனில், டயானா மீது அவை வைத்திருந்த மதிப்பினாலாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சூடான் அரச ஆதரவு போராளிகள் கறுப்பின மக்களை துன்புறுத்துகின்றனர்

### ஐ.நா சபை குற்றச்சாட்டு



சூடானில் அரசு சார்பான போராளிகள் டார்பூர் பிரதேசத்தில் வாழும் சூடானிய கறுப்பின மக்கள் மீது மனித உரிமை மீறல்களை மேற்கொண்டுவருகின்றனர். இவற்றை மனித இனத்திற்கெதிரான குற்றங்கள் என ஐ.நா சபை கண்டித்துள்ளது.

அத்துடன் டார்பூர் பிரதேசத்திற்கு சென்று முழுமையான தகவல்களைப் பெறமுடியாதுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இதுவரை ஒரு மில்லியன் மக்கள் தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேறியுள்ளனர். அதிகமான மக்கள் சூடானின் எல்லையில் அமைந்துள்ள சாட்டிற்குள் தஞ்சம் கோரியுள்ளனர்.

ஐ.நா மனித உரிமை அமைப்பின் அதிகாரிகள் விசாரணை மேற்கொள்வதற்கு பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு செல்லமுடியாதிருப்பதாக தெரிவித்தனர். மக்களை நேரடியாகச் சந்தித்து விசாரணைகள் மேற்கொள்வதன் மூலம் அப்பிரதேசத்தில் வாழும் மக்களின் உண்மை நிலையை அறியமுடியுமெனவும் தெரிவித்தனர்.

# ஜக்சன் குற்றவாளி இல்லையென நீதிமன்றம் தெரிவிக்கவுள்ளதாம்!

## அவரது சட்டத்தரணி கூறுகிறார்

குழந்தைகள் துஷ்பிரயோகம் தொடர்பாக பொப் இசைப்பாடகர் மைக்கல் ஜக்சன் மீது குற்றம் சுமத்தப்பட்டு இம்மாதம் 30 ஆம் திகதி



நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவுள்ள நிலையில் அவர் குற்றவாளி அல்லர் என நீதிமன்றத்தால் தெரிவிக்கப்படவுள்ளதென அவரது சட்டத்தரணி தெரிவித்தார்.

அத்துடன், மைக்கல் ஜக்சனுக்கு எதிரான குற்றங்களில் அவர் சம்பந்தப்படவில்லை எனக் கருதுவதாக ஜக்சனின் சட்டத்தரணி மேலும் தெரிவித்தார். இதேவேளை யூரிகள் ஜக்சனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்குப் போதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்திருந்தனர்.

இந்தக் குற்றங்களை மறுத்துள்ள ஜக்சன் தன்னிடமிருந்து அதிக பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே இக்குற்றங்களைத் தனக்கெதிராக மேற்கொண்டதாகத் தெரிவித்தார்.

அத்துடன், நீதிமன்றத்தில் தோன்றி தனது கோடிக்கணக்கான ஆதரவாளர்களுக்கு நன்றி செலுத்துவதற்காக அந்த நாளை எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

# ஈராக்கிய பொலிஸ் படைக்குள் தீவிரவாதிகள் ஊடுருவலாம்

## அமெரிக்க படை அதிகாரி கூறுகிறார்

அமெரிக்க கூட்டு படையினரால் பயிற்சி வழங்கப்பட்ட ஈராக்கிய பொலிஸ்படைக்குள் தீவிரவாதிகள் செயற்பட்டு வருவதாக அமெரிக்க இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் மார்ட்டின் டெம்சி தெரிவித்தார்.




ஈராக்கியப் பொலிஸ் படையில் பத்துவீதமான அதிகாரிகள் போராளிகள் எனவும், நாற்பது வீதமானவர்கள் பயிற்சி பெற்றபின் பொலிஸ் படையிலிருந்து விலகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



ஈராக்கின் தென்பகுதியில் 68 பொதுமக்கள் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்த சம்பவத்தின் பின்னரே இராணுவ அதிகாரி இந்தக் கருத்தினை தெரிவித்திருந்தார்.

அத்துடன் அமெரிக்கப்படைகளினால் பயிற்சி வழங்கப்பட்ட ஈராக்கிய பொலிஸார் தமது நாட்டின் மீது போர் தொடுத்துள்ளவர்களுடன் இணைந்து போராடுவதைவிட தமது நாட்டினை மீட்டெடுப்பதில் அதிக நாட்டம் கொண்டுள்ளதாக இராணுவ ஜெனரல் மார்ட்டின் டெம்சி மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இரு ரயில்கள் மோதியதில் மூவாயிரம் பேர் உயிரிழப்பு

## வடகொரியாவில் பயங்கரம்

வடகொரியாவில் இரண்டு ரயில்கள் ஒன்றோடொன்று நேருக்குநேர் மோதிக் கொண்ட பயங்கர விபத்தில் மூவாயிரம் பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

வடகொரியத் தலைநகரான பியொங்யொங்கிலிருந்து 50 கி.மீ வடக்கே உள்ள றியொங் சொங் என்ற இடத்திலிருந்த ரயில் நிலையத்தருகே இந்த விபத்து நடைபெற்றதாக தென்கொரியத் தொலைக்காட்சி அறிவித்தது.

சீனாவுக்கான பயணத்தை முடித்துக்கொண்டு வடகொரிய ஜனாதிபதி கிம் ஜொங் இல் இந்த ரயில் நிலையமூடாகத் திரும்பிய 9 மணி நேரத்துக்குப் பின்னர் இந்தக் கோர சம்பவம் நிகழ்ந்தது.

திரவ எரிபொருள் மற்றும் எரிவாயு என்பவற்றினை ஏற்றிச் சென்ற ரயில்களே மோதிக்கொண்டதாகவும் இந்தச் சம்பவம் உள்ளூர் நேரப்படி நேற்று பி.ப 1 மணிக்கு இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விபத்து நடந்த இடத்தை நெருங்க முடியாதளவுக்கு பாரிய தீவிபத்து ஏற்பட்டிருப்பதால், சேதங்கள் குறித்து உடனடியாக மதிப்பீடு செய்ய முடியவில்லை என்றும் 3000 பேர் கொல்லப்பட்டோ, காயமடைந்தோ இருக்கலாமென்வும் தெரிவிக்கப்படுகிறது,

இந்தச் சம்பவத்தையடுத்து, வடகொரியாவில் அவசர காலநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டுத் தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன எனவும் தகவல்கள் தெரிவித்தன.

# அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

## மகேஸ்வரன் தெரிவிப்பு

(கொழும்பு)

சபாநாயகர் தெரிவில் ஆளும் கட்சிக்கு எதிராக இயங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் தெரிவித்தார்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நிச்சயமாக சபாநாயகர் பக்கச்சார்பின்றி நடுநிலையாக நாடாளுமன்றில் செயற்படுவார். நாடாளுமன்றின் கௌரவங்களையும், பாரம்பரியங்களையும் கட்டிக்காப்பர் என்றும் அவா மேலும் தெரிவித்தார்.

## நாடாளுமன்றத்தில்

# 25 ஆண்டுகால அனுபவமுள்ள சபாநாயகர் லொக்குபண்டார!

(கொழும்பு)

பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார சுமார் 25 வருடங்களுக்கு மேலாக நாடாளுமன்றில் உறுப்பினராக இருந்து வருகிறார்.

இவர் 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பதுளை மாவட்டம் - ஹப்புத்தளை தேர்தல் தொகுதியிலிருந்து முதன்முறையாக நாடாளுமன்றத்திற்கு தெரிவானார்.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் உதவி சட்டவாக்கவியலாளராகவும் லொக்குபண்டார கடமையாற்றியுள்ளார். பேராதனை பல்கலைக் கழகத்தினதும், லண்டன் பல்கலைக கழகத்தினதும் பட்டதாரியான இவர் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் கீழ் பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்துவந்தார்.

கலாசார, செய்தி, கல்வி, உள்நாட்டு மருத்துவத்துறை, நீதி மற்றும பௌத்த சாசன அமைச்சராகவும் இவர் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

# சந்திரிகாவை எச்சரிக்கும் வகையிலேயே ஐ.தே.கவுக்கு ஆதரவாக வாக்களித்தோம்!

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

சமாதான நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா எதுவித முன் முயற்சிகளையும் எடுக்காத நிலையில் - அதற்கு எச்சரிக்கை விடுக்கும் நோக்கிலேயே சபாநாயகர் தெரிவில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக தாம் வாக்களித்திருப்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- சமாதானப் பேச்சுவார்த்தையினை தமது ஆட்சி அமைக்கப் பட்டவுடன் உடனடியாக ஆரம்பிக்கப் போவதாக சந்திரிகா தெரிவித்திருந்தார். வாக்குறுதி வழங்கி இவ்வளவு காலமும் சமாதானம் குறித்து எந்த வித நடவடிக்கையையும் சந்திரிகாவால் எடுக்கமுடியவில்லை.

இதற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நோக்கிலேயே ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் லொக்குபண்டாராவுக்கு ஆதரவாக வாக்களித்தோம்.

இந்த வாக்களிப்பு மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பதன்றோ, அதற்கு ஆதரவாக செயற்படுமென்றோ மக்கள் கருதக்கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பம்

வடமேல் மாகாணசபைத் தேர்தலுக்கான ஆரம்பகட்ட கண்காணிப்பு நடவடிக்கை தற்போது நடைபெற்று வருவதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதன்படி குருநாகல் மாவட்டத்தில் 1100 கண்காணிப்பாளர்களும், புத்தளம் மாவட்டத்தில் 650 கண்காணிப்பாளர்களும் கடமையாற்றுவதாக பவ்ரல் அமைப்புத் தெரிவித்தது.

# மிதிவெடி அகற்றிய பிரதேசம் அச்சுவேலியில் ஒப்படைப்பு!

அச்சுவேலிப் பகுதியில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந்த பிரதேசத்தின் ஒரு பகுதியை நேற்று பொதுமக்கள் பாவனைக்காக உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டது.

ரொங்கோ மிதிவெடி அகற்றும் நிறுவனம் - இராணுவத்தினருக்கு மிதிவெடி அகற்றுவது தொடர்பாக பயிற்சிகளை அளித்து - மனிதாபிமான அடிப்படையில் அச்சுவேலிப் பகுதியில் 2399 சதுர மீற்றர் பரப்பளவில் இருந்த மிதிவெடிகளை அகற்றியது. இந்தப் பிரதேசமே பொதுமக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று அச்சுவேலி மிதிவெடி அகற்றப்பட்ட பகுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் இராசதுரை, மாவட்ட மிதிவெடி அகற்றும் செயற்பாட்டு அலுவலக அதிகாரி ம.செந்தில் உட்பட பல இராணுவ உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

மீள மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலப்பகுதியில் பெரும்பகுதி விவசாய நிலங்களாக காணப்படுவதுடன் மக்கள் குடியிருப்புக்களும் ஆங்காங்கே இருப்பது குறிப்பிடத்தக்கது.

## காணாமற்...

மக்கள் சுதந்திர முன்னணியே கடத்தியிருக்கலாம் என்று ஜாதிக ஹெல உறுமய குற்றம் சாட்டியிருந்தது.

இந்த நிலையிலேயே நேற்றுக் காலை நாடாளுமன்றம் கூடியபோது காணாமற்போனதாக அறிவிக்கப்பட்ட பிக்குகள் இருவரும் எதிர்க் கட்சி ஆசனங்களில் அமர்ந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சம்பந்தன்...

வித்துக்கொண்டிருந்தனர். இந்த நிலையில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த ஜாதிக ஹெல உறுமயவை சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் எழுந்து சபையில் அநாகரிகமாக நடந்து கொள்ளவேண்டாம் எனக் கோரினார்.

ஆனாலும், யாரையும் உரையாற்ற விடாமல் ஆளும் கட்சியினர் தடுத்தனர். இதனால் சபையில் நீண்ட நேரம் கூச்சல், குழப்பம் நிலவியது.

## யு.என்.எச்.சி.ஆர்...

தெரிவித்தார்.

இவரது கருத்துக்குப் பதிலளித்த அரசியற்துறைப் பொறுப்பாளர் - வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் கடந்த இரு தசாப்த போரின் பின் தற்போது புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை என்ற திட்டத்தின்மூலம் சமாதானப் பேச்சுவார்த்தையை எவ்வித தாமதமும் இல்லாமல் மீள ஆரம்பிக்குமாறு கோருகின்றனர்.

தமிழ்மக்களின் இந்தக் கோரிக்கையினை அரசாங்கம் தள்ளிப்போட முடியாது. ஏனெனில், அவர்கள் ஒரே குரலிலேயே தமது அபிலாஷைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

அத்துடன், மக்களின் மீள்குடியேற்றத்திற்காகவும் விரைவாக தீர்வுகாணப்பட வேண்டும். குறிப்பாக பெருமளவான விவசாய நிலங்கள் யாழ்.குடாநாட்டில் படையினரின் உயர்பாதுகாப்பு வலயங்களாக உள்ளன. அத்துடன், இராணுவத்தினரின் கீழுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களில் பெருமளவு மிதிவெடிகள் உள்ளன. இதனால், இப்பகுதிகளில் மக்கள் மீள்க்குடியமர்வது என்பது மிகப்பெரிய சவாலாகவே இருக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் - விடுதலைப் புலிகள் தரப்பில் - அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், துணை அரசியற்துறைப்பொறுப்பாளர் தங்கன், திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் தூயவன் மற்றும் புலிகளின் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மக்நமரா தலைமையிலான குழுவில் யு.என்.எச்.சி.ஆரின் ஜெனிவா கொள்கை வகுப்புக்குழுவின் வனேசா மற்றர், ஜெனிவா ஒருங்கமைப்பாளர் மார்ட்டின் லொப்ரஸ், ஆசிய பிராந்திய சிரேஷ்ட சட்ட ஆலோசகர் பீற்றர் ஜான்ஸன் இலங்கைக்கான யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி நெயில் றைற், இலங்கைக்கான யு.என்.எச்.சி.ஆர் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஓர்வாசிபட்டேல், இலங்கைக்கான நிறைவேற்று அதிகாரி செல்வி மர்பி, யாழ்.குடா வெளிக்கள அலுவலர் கீ முறாட்டா, கிளிநொச்சிக்கான தகவல் தொடர்பு அலுவலகத்தைச் சேர்ந்த அனிசெட் டைசபா மற்றும் கிளிநொச்சிக்கான தொடர்பாளர் எட்வேட் பென்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு எமதுநிறுவனத்தில் வெற்றிடங்கள் இருப்பதால் தகுதியானவர்களிடமிருந்து (ஆண்கள் மட்டும்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**❋கணினி பக்கவடிவமைப்பாளர்கள்**

(Photo shop, corel Draw, Pagemaker என்பன தெரிந்திருத்தல் வேண்டும்)

**❋ஒப்புநோக்குநர்கள்**

**தகமை:** கா.போ.த. உயர்தர பரீட்சையில் சித்திபெற்றிருக்கவேண்டும்.
அனுபவமுள்ளவர்கள், ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**❋அச்சக முகாமையாளர்**

**தகமை:** அச்சகத்துறையில் 10 வருட அனுபவம் எதிர்பார்க்கப்படுகிறது.

**தகமையுடையோர் எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அலுவலக நேரத்தில் நேரில் வந்து தொடர்புகொள்ளவும்.**

**நிர்வாக இயக்குநர்.
நமது ஈழநாடு,
இல.267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.**

## சபாநாயகராக லொக்குபண்டார...

ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே சபைக்கு நடுவே நிலதத்தில் அமர்ந்திருந்தார். ஏனைய உறுப்பினர்களும் சபைக்கு நடுவே ஒன்றுகூடி கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பிரமுகர்கள் சிலர் ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவைப் பெறும் இறுதி முயற்சிகளில் ஈடுபட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

இரண்டாம்சுற்று வாக்களிப்பில் குழப்பநிலை ஏற்பட்டதால் சபை நடவடிக்கைகள் குறிப்பிட்டளவான நேரம் ஸ்தம்பிதமடைந்திருந்தன. இதையடுத்து, இரண்டாம்கட்ட வாக்குப் பதிவு செல்லுபடியற்றதென அறிவித்த பிரியாணி விஜேசேகர மூன்றாவது கட்ட வாக்குப்பதிவு நடத்த உத்தரவிட்டார்.

மூன்றாவது கட்ட வாக்களிப்பின் போது கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குமுறைகள் குறித்து நாடாளுமன்ற செயலாளர் பிரியாணி விஜேசேகர அனைத்துக் கட்சி தலைவர்களுடனும் கலந்துரையாடி - கடுமையான விதிமுறைகளின் அடிப்படையில் வாக்களிப்பு நடைபெறும் என அறிவித்தார்.

வாக்களிக்கும்போது உறுப்பினர்கள் இரகசியத்தைப் பேணவேண்டும், கையொப்பங்களை தெளிவாக இடவேண்டும், யாருக்கு வாக்களித்தார் என்பதை உறுப்பினர்கள் பகிரங்கப்படுத்தக்கூடாது ஆகிய மூன்று நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இந்த வாக்களிப்பு இடம்பெற்றது.

அத்துடன் - வாக்குப்பெட்டிகளை தமது ஆசனத்துக்குப் பின்புறமாக வைக்க நடவடிக்கை எடுத்த அவர் இரகசியமாக வாக்களிக்கவென மறைப்புத் திரைகளும் போட உத்தரவிட்டார்.

மூன்றாவது சுற்று வாக்களிப்பு பி.ப 5 மணியளவில் ஆரம்பமானது. பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் இடம்பெற்ற இந்த வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டு - புதிய வாக்குச் சீட்டுக்கள் அரசாங்க அச்சகத்திலிருந்து எடுத்து வரப்பட்டன.

வாக்களிப்பு முடிவுற்றதும் சபாநாயகராக யார் தெரிவாகப் போகிறார் என்ற குழப்பமும், பரபரப்பும் நிலவியது. நேற்றுமாலை 7.25 மணியளவில் சபாநாயகர் தெரிவு தொடர்பான முடிவுகளை நாடாளுமன்ற செயலாளர் பிரியாணி விஜேசேகர அறிவித்தார்.

110 வாக்குகளைப் பெற்ற டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார சபாநாயகராக தெரிவாகியுள்ளதாகவும் இவரை எதிர்த்துப் போட்டியிட்ட டி.யூ.குணசேகராவிற்கு 109 வாக்குகள் கிடைத்ததாகவும் அறிவித்தார்.

முதலிரு சுற்று வாக்களிப்பின் போது வாக்களிக்காமல் ஒதுங்கியிருந்த ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த இரண்டு பௌத்த பிக்குகள் மூன்றாவது சுற்றில் வாக்களித்தனர்.

இந்த வாக்களிப்பில் ஐ.தே.க உறுப்பினர் ஒருவர் ஆளும்கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சபாநாயகராக லொக்குபண்டார தெரிவாகியதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதையடுத்து நாடாளுமன்ற செயலாளர் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

தொடர்ந்து டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டாரவை ரவூப் ஹக்கீமும் ஜெயலத் ஜெயவர்த்தனாவும் சபாநாயகர் ஆசனத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கு நாடாளுமன்ற செயலாளர் முன்னிலையில் சபாநாயகர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இதனையடுத்து, சபாநாயகர் உரையாற்றினார். தொடர்ந்து கட்சிகளின் தலைவர்கள் சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவித்து உரையாற்றினார்கள்.

இலங்கை வரலாற்றில் இதுவரை 16 நாடாளுமன்ற சபாநாயகர்கள் தெரிவாகியுள்ளபோதிலும், மூன்று முறை வாக்களிப்புக்கு விடப்பட்டு நீண்டநேர கூச்சல், குழப்பங்கள் மத்தியில் சபாநாயகர் தெரிவு இடம்பெற்றது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.